# திராவிடநாடு



புரட்சிக்கவி விட்மன்.

# வால்ட் விட்மன்

"நரகம் என்னும் பூச்சாண்டி
தூசுக்குச் சமானம்!
சுவர்க்கம் என்னும் மாயவலை
அணுக்குச் சமானம்!!"

* * *

வரவேற்பா, கிடைக்கும்! அதிலும், நூறு ஆண்டுகளுக்கு முன்பு! பழைய கலாயின மத பீடங்கள்—பாட்டுக்கட்டுதல் பரமன் புகழைப் பாடவே என்றிருந்த பாவலரும், நாவலரும், கணைகளைச் சொரிந்தனர். காலி! சொறிபிடித்த கையன்! பேனாவைப் பிடுங்கி எறியுங்கள்!—என்றெல்லாம், குமுறலும் கொந்தளிப்பும் நாட்டில், எழுந்தது. அதைச் சமாளிக்க, அவன் செல்வவானல்ல! ஏழை!! உள்ளத்தில் உண்மையைச்சொல்ல வேண்டுமெனும் உறுதியிருந்தது—வயிறோ, பசிபசி என்று அலறிக் கொண்டேயிருந்தது. எனினும் அவன் பாதை மாறிவிடவில்லை.

* * *

**அன்புத் தோழா!**

நாம் வெல்வோமா, அல்லது ஒரேயடியாகத் தோற்றுவீழ்வோமா என்பதைக்கூடக் கருதாமல், உனது சேர்விடம் இன்னதென்று அறியாமல், என்னுடன் உன்னையும் அழைக்கிறேன். வா! வா!! நீதிக்குப் போராடுகிறோம் எனும் நம்பிக்கையுடன் அழைக்குமென்னுடன், சேர, வா.

*

'துயர்கள், என் சட்டை மாற்றங்களில் ஒன்று; காயம்பட்டவனை எப்படி யிருக்கிறதென்று நான் கேட்பதில்லை. ஏனெனில், நானே காயம்பட்டவனாய் விடுகிறேன்."

* * *

தீட்டிக்கொண்டேயிருந்தான் தன் எண்ணங்களை, வாரி வழங்கி. கவிதைகள் பல, வெளிவந்த வண்ணமேயிருந்தன! அவைகளை அச்சுக் கோர்த்து, அதற்கும் ஆள் கிடைக்காதோ எனும் ஐயத்தால்—அடித்து, மடித்து, தைத்து, உலகுக்கு அனுப்பினான். நாட்டோர், நகையாடினர்! பாட்டா, அது—எதுகையில்லை மோனையில்லை, சந்தமில்லை, அந்தமில்லை, கருத்துக்கள் யாவும் அழுகல் சரக்குகள், தீண்டுவதே கூடாது — என்று; இப்படி வரவேற்பு கிடைத்தது அவனுக்கு. அவனோ, "நான் பரலோகத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. மக்களைப்பற்றி, சிந்திக்கிறேன்—மக்களுக்காக எழுதுகிறேன் — நான் மக்கள் தொண்டன்," என்று தெரிவித்தான். வறுமை கொட்டிக் கொண்டேயிருந்தது, சாகுமளவில்! அவனுடைய அருமையை—எழுத்தின் அழகை — பெரிய பெரிய எழுத்தாளர்கள் ரசித்து ருசித்த பின்னர்தான், அமெரிக்க மக்கள் கூட, விழித்துப் பார்க்கலாயினர். கருத்தை ஒரு புறம் வைத்துவிடு! கவிதை அழகைப்பார்!!—என்றனர். கருத்தை ஏன் தள்ளவேண்டும்! அவன் சொல்வது, தவறு என்ன!! —இப்படியும், சகாக்கள் கிடைக்கலாயினர், நிற வெறியை ஒழிக்கப் பாடுபட்டு உயிர் துறந்த அமெரிக்கத் தலைவன் ஆபிரகாம்லிங்கனே, தோழனானான். ஒரு போது, ஏசி இகழப்பட்ட, அந்தக் கவிஞனை,

# அரசியல் ரசவாதம்

வன்னியர் ஓட்டு வன்னியருக்கே!
—எஸ். எஸ். இராமசாமி

வன்னியர் ஓட்டு அன்னியருக்கே!!
—கனம். எஸ். எஸ். இராமசாமி படையாச்சி.

*

கூத்தாடிகளுடன் கூடிக் கும்மாளமடிப்பதா?
—திடலில்

ராதா நாடகம் எங்கள் கழக வெற்றி!
—கொட்டகையில்

*

டிட்டோ அழிவுப் பாதை செல்கிறார்.
—ஸ்டாலின் ரஷ்யா

டிட்டோ பாதையில் பாடம் பெறுகிறோம்.
—புல்கானின் ரஷ்யா

*

தி. மு. கழகம் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடாதது ஏன்?
—கம்யூனிஸ்டு 1954

தி. மு. கழகம் ஏன் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடுகிறது?
—கம்யூனிஸ்டு 1955

*

ஜாதி கூடாது என்பதுதான் எமது கொள்கை.
—கம்யூனிஸ்டு வாதம்

ஏ. எஸ். கே. ஐயங்காரும் அனந்தநம்பியாரும் இன்று பேசுவர்!
—கம்யூனிஸ்டு அறிவிப்பு

*

காங்கிரஸ் தோற்கவேண்டும்! கம்யூனிஸ்டு ஜெயிக்கவேண்டும்!
—பொதுத் தேர்தலில்

கம்யூனிஸ்டு தோற்கவேண்டும்! காங்கிரஸ் ஜெயிக்கவேண்டும்!
—இடைத் தேர்தலில்

*

எமது தலைவருக்குப் பெட்டி தூக்கியவர் காமராஜ்.
—காமராஜர் கனமாகா முன்பு

காமராஜர், ஆற்றல் மிக்கவர்! அறிவின் சிகரம்!
—காமராஜர் கனமானதும்

*

சினிமாவில் பகுத்தறிவு புகவேண்டும்!
—நுழையா முன்பு

சினிமாவை விடு! சிலம்பம் எடு!!
—நுழைந்த பிறகு

*

எமது கழகம் சினிமா கதை எழுதுவதல்ல!!
—தமிழரசு 1954

எமது கழகம் சினிமாவில் வெற்றிமேல் வெற்றி பெறுகிறது.
—தமிழரசு 1955

*

சிவசண்முகம் சபாநாயகராகிவிட்டால் தீர்ந்ததா! ஆதித்திராவிடர்நிலை உயர்ந்துவிட்டதா! இது காங்கிரஸ் நடத்தும் கண் துடைப்பு—உஷார்!!
—அப்போது

கக்கன் அவர்களைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக்கிவிட்டார்கள்—ஆஹா! என்னே காங்கிரசின் சாதனை! இனி, ஆதித்திராவிடருக்கு என்ன குறை!!
—இப்போது

*

இதுகளெல்லாம்தானே கழகத்தில் உள்ளவர்! ஹெ! ஹே!!
—இருந்தபோது

கழகத்தைவிட்டு இன்னின்ன பிரமுகர் வெளியேறிவிட்டார்! தெரியுமோ! ஹி! ஹி!
—வெளியேறியதும்

★

கடந்த மே திங்கள் 19ந் தேதி அமெரிக்க மக்கள் எல்லாம் நினைத்துக்கொண்டு, விழாக் கொண்டாடியிருக்கிறார்கள்.

அவன் தீட்டிய "புல்லிதழ்கள்" (Leaves of the Grass) எனும் நூலுக்கு, நூறாண்டுகள் பூர்த்தியானதை ஒட்டித்தான், அந்த விழா. எல்லா எழுத்துச் சிற்பிகளும், அறிவுலக மேதைகளும், அந்த நூலை 'மிகப் பெரிய உலகக் களஞ்சியம் என்று கொண்டாடியிருக்கின்றனர். நூலுக்கு, நூற்றாண்டுவிழா! முதல் அதிசயம் இது!! அப்பேற்பட்ட அரிய நூலைத் தீட்டிய, சிந்தனையாளனான வால்ட் விட்மனையே இந்த வாரம், நமது ஏடு அலங்கரிக்கிறது.

சமூகத்தின் தீமைகளை அகற்றப் பாடுபடும் நம்மை எவ்வண்ணம், இன்றைய இலக்கியப் பேராசிரியரும், அறிஞர் குழாத்தினரும் 'தீண்டாதார்' எனக் கருதுகின்றனரோ, அந்த நிலையை ஒரு நாள் அனுபவித்தவன், விட்மன்.

மக்களை வென்றான், எழுத்தால்! கொள்கையால்!! பிறகு, தூற்றியே துதிபாடும், நிலை பெற்றான்.

எழில் பெறும் கவிதைகள் பாடியோர் பலருண்டு! ஆனால் விட்மன், உலகக்கவியாக விளங்கக் காரணம் கவிதைகளில் எழில்மட்டும் இருந்தால் போதும் என்றெண்ணாமல் மக்களை வாழ்விக்கும் எண்ணங்களையும் வைத்துத் தீட்டியதுதான்.

அவன், ஒரு புது உலகச் சிற்பி! அவன், என்றோ ஒரு நாள் மக்களைப் பார்த்து அழைத்தான், மேழியிருப்பதுபோல; இன்றும், அந்த அழைப்பு, எங்கும் ஒலிக்கிறது. ஏனெனில், அக்குரல், மக்கள் குரல்! மக்களுக்குத்தேவையான குரல்:—

மனிதா!

நீ யாருக்கும் தலைவணங்காதே;

நிமிர்ந்துநட;

கைவீசிச்செல்;

உலகைக் காதலி!

செல்வரை; செருக்குள்ளோரை, மத வெறியரை—தள்ளி எறி.

மனச்சாட்சியே உன் தெய்வம்.

உழைப்பை மதி; ஊருருக்குநவு.

உனக்கு எட்டாத கடவுளைப் பற்றி பிதற்றாதே!

சிந்தனை செய்! செயலாற்று!!

—★—

# ★ வெட்க தினம் ★

இந்தத் திங்கள் ஐந்தாம் நாள் எத்தனை அக்ரகாரங்களில் கண்ணீர் ஆறு ஓடினவோ, எவ்வளவு பார்ப்பனரின் கண்ணீர் சிவந்தனவோ அறியோம், அன்று துக்க தினம் கொண்டாடும்படி 'அவர்களின்' தலைவர்கள் கேட்டுக்கொண்டனர் என்றுமட்டும் தெரியவருகிறது.

துக்கத்துக்குக் காரணம் துரைத்தனத்தார் ஆரியரின் மனதைப் புண்படுத்திவிட்டனராம்.

மனம் புண்பட்டதற்குக் காரணம் ஒரு ஓவியம்!

சென்னை சர்க்காரின் அரிஜன இலாகா தயாரித்து வெளியிட்ட அந்த ஓவியம், பார்ப்பனரைக் கேவலப்படுத்துவதாகவும், பார்ப்பனர்மீது பிறருக்குத் 'துவேஷம்' பிறக்கும்படியும், அமைந்திருக்கிறது என்றும் புரோகிதபுரியினர் புகார் கிளப்பினர்.

இந்துவின் துந்துபி முழங்கிற்று!

இதோ வந்தோம் என்று சில பார்ப்பனப் பிரமுகர் கிளம்பினர்!

ஆஹா! என்றார் ஒருவர்.

ஓஹோ! என்றார் இன்னொருவர்.

ஐயயோ! என்றார் வேறொருவர்.

விட்டேனா பார்! என்று வீராப்பும் பேசினார் மற்றொருவர்.

துக்க தினம் — துரைத்தனத்தாரிடம் தூது போவதுபோன்ற திட்டங்கள் கிளம்பின.

இந்தக் கூக்குரலுக்குக் காரணமாக அமைந்திருந்த ஓவியத்தில் என்ன இருந்திடக் காண்கிறோம்.

ஒரு பழங்குடி மகனை ஒரு பார்ப்பனர், எட்டி நில், கிட்டே வராதே என்று மிரட்டுகிறான்—ஒரு பகுதி.

மறு பகுதியில், இப்படிச் செய்தால் இப்படி நேரிடும் என்று விளக்கமளிக்க, அந்தப் பார்ப்பனனைச் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கும் காட்சி. தீட்டப்பட்டிருக்கிறது.

இதுதான், அந்த மகானுபாவர்களின் மனதைப் புண்படுத்தி, கண்களைக் குளமாக்கிவிட்டது.

இதற்குத்தான், மார்பிலடித்துக் கொண்டு கிளம்பினர்.

இந்தப் 'போர்க்கோலம்' கண்டு, துரைத்தனத்தார், நடுநடுங்கிப் போனதாகவும், வெளியிட்ட பிரச்சார ஓவியத்தை 'வாபஸ்' பெற்றுவிட்டதாகவும் ஒரு செய்தி கிளம்பிற்று.

சர்க்கார் தரப்பிலே 'மௌனம்' நிலவுகிறது.

பார்ப்பனரும், இது குறித்து வெளிப்படையாகப் பேசிடக் காணோம்.

உதவாக் கரைகளின் உறுமலுக்கு அஞ்சிடும், நெஞ்சம் கொண்டதாகக் காமராஜர் சர்க்கார் இருக்காது என்று நம்புகிறோம்—எக்காரணம் கொண்டேனும் சர்க்கார் இந்தச் சலசலப்புக்குக் அஞ்சி, சரணாகதியானால், திராவிடம் தாங்கிக்கொள்ளாது.

வெட்க தினம் கொண்டாடுவர் திராவிடர்.

வேதியபுரிக்கு வெண்சாமரம் வீசும் வேலைதான் மிஞ்சும் சர்க்காருக்கு.

திராவிடம் தாங்கிக்கொள்ளாது, நேசத் தொடர்பும், பாசவலையும் அறுபடும், பொறுத்தது போதும் போர் முரசு ஒலிக்கட்டும் என்ற முழக்கம் கேட்கும்.

களம் அமையும்—காமராஜர் ஆட்சிக்குக் கடும் சோதனை ஏற்படும்.

எதை வேண்டுமானாலும் திராவிடர் அனுமதித்துவிடுவர், நேசத்துக்குக் கட்டுப்பட்டு—ஆனால் தன்மானத்தை அழித்துக்கொள்ள மட்டும் ஒருபோதும் இசையார்.

ஆரியருக்கு அடிபணியும் ஆட்சியை அனுமதிக்க மாட்டார்கள்! காமராஜர் இதை அறிவார்! ஆனால் அவருடைய கண்ணையும் கருத்தையும் மறைத்திட ஆரியர் முனைந்து வெற்றிபெற்றால்......!

என்ன நிலைமை?

எண்ணிடவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

தாலமுத்து! நடராஜா! என்ன நிலைமையோ, யார் கண்டார்கள்!!

ஆவலும் அச்சமும் கலந்து உள்ளம் கொதிக்கிறது; ஒரு கிழமைக்குள் உண்மை நிலை விளக்கப்பட்டாக வேண்டும். அதுவரை, பொறு மனமே, பொறு!!

★

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



சி.என்.அண்ணாதுரை.

ஒரு நாட்டு மக்களின் வெறுப்பைக் கிளறக் கூடிய குணமும், செயலும் எவை எவையோ, அவை யாவும் நெளிந்தன பக்கிங்காமிடம். எனினும், ஜேம்ஸ் மன்னன் செல்லப்பிள்ளை என்றான், சார்லஸ் மன்னன், இணைபிரியாத் தோழன் என்றான், மக்கள் எவ்வளவு மனக்கொதிப் படைந்திருப்பர்!

ஜேம்ஸ் மன்னன் காலத்திலேயே இந்த வெறுப்பை மக்கள் காட்டினர்; மன்னன் புருவத்தை நெறித்தான்— புன்னகையுடன் கூட அல்ல, பதிலளித்தது. "ஏசுவுக்கு ஒரு ஜான், எனக்கு ஒரு ஜார்ஜ்" என்று ஆணவம் பேசினான்.

பிரிட்டிஷ் மக்கள், மன்னராட்சி முறை, மக்களின் உரிமைத் தத்துவத்துக்கு ஊறு தேடுவது, முரணானது என்று எண்ணிக்கொண்டு, விவாதம் நடத்தி வந்தவர்களல்ல. உள்ளூர, மக்களுக்கு, மன்னராட்சி முறை ஒரு தேவையான ஏற்பாடு என்ற எண்ணம் பலமாக இருந்து வந்தது. ஆனால் அவர்கள் உள்ளத்திலே மற்றோர் எண்ணம் உறங்கிக் கிடந்தது—மன்னராட்சி முறை தேவைதான், அதனை ஏற்படுத்தியதும் மக்கள்தான்—என்பது அந்த எண்ணம். மக்கள் விரும்பி, மன்னனை ஆளச் சொல்கிறார்கள்—எனவே, மூல உரிமை மக்களுடையது— ஆற்றலுக்காகவோ, அறிவுக்காகவோ, இவை அற்றவனாக இருப்பினும் பரம்பரைக்காகவோ, மன்னன் என்றோர் சின்னப் பொருள் இருக்கட்டும் என்று மக்கள், ஒரு ஏற்பாடு செய்தனர் — மக்கள், மன்னனுக்கு அதிகாரமளித்தனர், எனவே, மன்னன் தனக்குக் கிடைத்துள்ள பெரும்பதவி, மக்களிடமிருந்து கிடைத்தது என்ற உணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும், பதவியைப்பறித்துவிடும் உரிமை மக்களுக்கு இருக்கிறது என்ற அச்சம் கொண்டவனாக இருக்க வேண்டும், பெரும்பதவி தந்ததற்கு நன்றியறிதலுடன் நடந்துகொள்வதுடன், மேலும் மேலும் மக்களுடைய அன்பைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும், மக்களின் நலனைக் காக்கவேண்டும்— இதுவே மன்னன் கடமை என்று மக்கள் எண்ணினர். இந்த எண்ணம், வெளிப்படையான பேச்சாக, அடிக்கடி கிளம்புவதில்லை – தூங்கும் புலியாக இருந்துவந்தது. மன்னன், உரிமைகளின் இருப்பிடம்மட்டுமல்ல, கடமையின் இருப்பிடம், என்றனர் மக்கள்!

ஜேம்ஸ், இதை அறவே மறுத்தான்—சார்லசும் அவ்விதமே,

மன்னன் பெறும் அதிகாரம் ஆண்டவனால் அளிக்கப்படுவது என்ற தத்துவம் பேசிய ஜேம்ஸ், மக்களுக்கு மன்னன் சில உரிமைகளை அளிக்கிறான், ஆனால் அளிக்கும் கரமே அதனைத் திரும்பப் பறித்துக்கொள்ளவும் கூடும், என்று வாதாடினான். சார்லஸ் இந்த முறைக்காகப் போராடினான்.

நீதி மன்றங்கள், ஏற்கெனவே அமுலில் உள்ள சட்டங்களின் துணைகொண்டு வழக்குகளிலே தீர்ப்பளிப்பதா, அல்லது அரசாள்வோனின் விருப்பமறிந்தும், அரசாள்வோனின் ஆதிக்கத்துக்கு உகந்த விதமாகவும் தீர்ப்பளிப்பதா, என்பதே கூட ஒரு பிரச்னையாக்கப்பட்டுவிட்டது.

மக்கள், சட்டத்துக்கு உட்பட்டவர்கள்; அதுபோலவே ஆட்சியிலுள்ளவர்களும் சட்டத்துக்குப் பொதுவாக உட்படவேண்டும், அதுதான் நல்லாட்சியின் இலட்சணம் என்று மக்கள் நீண்ட நாட்களாகக் கருதிவந்தனர். இதைக் கூட ஜேம்ஸ் மதிக்க மறுத்தான்.

கோக் எனும் வழக்கு மன்றத் தலைவர், ஜேம்சின் கருத்தை மறுத்தார்—உடனே அவரை வேலையினின்றும் நீக்கிவிட்டான் மன்னன்.

'நட்சத்திர மண்டலம்' என்ற பெயர் படைத்த அரச நீதி மன்றத்திலே, அரசன் ஆணையைக் குலைக்கும் செயல் புரிந்ததாக, கோக்மீது குற்றம் சாட்டப்பட்டது.

"அரசனுடைய ஆணை மகத்தானது; அதனைக் குறித்துப் பேசிட வழக்கறிஞர்கள் அருகரல்லர்! ஆண்டவனுடைய செயலைக் குறித்து மறுத்துரைப்பது நாத்திகம்! நல்ல கிருஸ்தவர்கள் ஆண்டவனுடைய கருத்தை அவர் வாக்கான வேதத்தின் மூலம் அறிந்துகொள்வர்; அதுபோலவே மன்னன் இதனைச் செய்யலாம், இதனைச் செய்தல் கூடாது என்று மக்கள் கூறுவது கூடாது, மன்னனுடைய கருத்தைக் காட்டும் சட்டத்தைக்கொண்டு மக்கள் ஒழுகவேண்டும்" என்று இதுபோது, ஜேம்ஸ், நட்சத்திர மண்டபத்தில் வெளிப்படையாகவே பேசினான் — இதே முறையை, சார்லசும் கையாண்டான். மக்கள் மிரண்டனர்! ஆண்டவன் அரசன் —என்று ஒரு பயங்கரமான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால், எவ்வளவு கொடுமைகளையும் செய்துவிட்டு, 'எல்லாம் அவன் சித்தம்' என்று கூறிவிடலாமே; மன்னர்கள் இத்தகைய கொள்கையை நிலைநாட்டிவிட்டால், பிறகு, அரசு முறையிலே, நீதி நேர்மை

ஒழுங்கு, ஏது? மக்களுக்கு, உரிமைதான் ஏது என்று எண்ணினர், அச்சமடைந்தனர்.

சார்லஸ் மன்னன், மக்களின் மனதை மருட்டிய இந்தக் கொள்கையை மிகுந்த நம்பிக்கையுடன், கூசாமல் குளருமல், தெளிவாகத் தைரியமாக, பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆசான் கூறுவதுபோலவும், சீடருக்குக் குரு கூறுவது போலவும், எடுத்துரைக்கக் கண்ட மக்கள், ''இதேது, பித்தம் போலாகிவிட்டது, இந்தக் கொள்கை—இது அரண்மனையிலே குடிபுகுந்துவிட்டால், நாடு, காடு தானுகும்'' என்று எண்ணினர்; எனவே, எப்பாடுபட்டேனும், இந்தக் கேடான கொள்கையை ஒழித்தாக வேண்டும், என்று உறுதி பூண்டனர்.

உல்லாச வாழ்க்கையைத் தேடி அலேந்து ஊர்க்குடி கெடுக்கும் பக்கிங்காம் போன்றவர்களை அதிகாரத்தில் மன்னர் அமர்த்திக்கொள்வான். ஆண்டவனுக்குச் சமானம் அரசன். ஆகவே, ஆகுமா இந்த அக்ரமம் என்று கேட்கக்கூடாது; கேட்பது நாத்திகத்துக்கு ஒப்பாகும்; அறமறிந்துரைப்பார் ஒருவர், அரசன் ஆணைக்குக் குந்தகம் விளைகிறது என்று அவரை விரட்டுவான் மன்னன், இதென்ன அக்ரமம் என்று கேட்கலாகாது; வெளிநாடுகளின் பகையைக் காரணமற்றுக் கிளப்புவான் மன்னன், ஏன் என்று கேட்கக்கூடாது. ஏளனம் ஏற்படும் விதமான தோல்வி நேரிடும், ஐயோ! என்று ஆயாசப் படக்கூடாது, ஏனெனில் இவை அரச காரியங்கள், அரசனே ஆண்டவனின் அருள் பெற்றவன்!

இந்தத் தத்துவத்தைத் தகர்த்தெறிந்தாலன்றி, தன்மானம் நிலைக்காது, உடைமை, உரிமை, எதுவும் இருக்காது, என்பதை எண்ணும்போதே, மக்கள் கொதிப்படைந்தனர். அவர்கள், மக்களின் உரிமைகளைக் காக்க ஏற்பட்ட சட்டங்களைக் காட்டினுல், மன்னன், அது என் இஷ்டத்தால் இருக்கும் ஏடுகள், விரும்பினுல், மாற்றிவிட முடியும், என்கிருன். மக்களின் உரிமைகளை மன்னனுக்கு எடுத்துரைக்கவும், மன்னனுடைய கடமைகளை அவனுக்கு நினைவுபடுத்தவும், மன்னனுடைய செயல்களை மக்கள் ஏற்றுக்கொள்கிருர்களா என்பதை எடுத்துக்கூறவும், மன்னன் இன்னின்ன காரியமாற்ற வேண்டும் என்று அறிவிக்கவும், ஆற்றல் பெற்ற (பார்லிமெண்ட்) மாமன்றம், இருப்பதைக் கூறினுல், ''மாமன்றமா! நான் அழைத்தால் கூடும்—கை அசைத்தால் கலேயும்!!'' என்றுரைக்கிருன். மக்களுக்கு வேறு பாதுகாப்பளிக்கும் சாதனம் என்ன? என்று எண்ணலாயினர்! மக்கள் கரமும் மன்னன் சிரமும்!!—என்ற தொடர் மொழிமீது, எண்ணம் பாய்ந்தது. மன்னன், விளக்கமுரைத்துவிட்டால், மக்கள் தமது நிலே அறிந்து பணிந்து கிடப்பர், என்று எண்ணிக்கொண்டான்; மக்களோ, தமது திறத்தைக் காட்டி உரிமையை நிலே நாட்டிக்கொள்ள வேண்டிய கட்டத்தை நோக்கி விரைந்தனர். பனிப்பாறை உருகுவது போல, மக்களின் எண்ணம், இந்த வகையிலே மாறிக்கொண்டிருந்தது. அரண்மனைக்குள்ளே இருந்தவர்களால் இந்த மாறுதலே உணர முடியவில்லே.

மக்கள், பக்கிங்காமின் கொடுமைகளைப் பேசலாயினர்.

வீடுகளிலும் கடைவீதிகளிலும், பாசறைகளிலும், பார்லிமெண்டிலும், இந்தக் கண்டனக் குரல் கிளம்பிற்று.

அவன் இருக்குமட்டும் அரசன் அக்ரமம் செய்தபடிதான் இருப்பான் என்றனர் பலர். ஒரு சிலர் ''அவன் இருக்குமட்டுந்தானு! அவன் போனுல் வேறு ஒருவன்! அக்ரமம் அழியாது. அது அழிய வேண்டுமானுல், அரசன் கொண்டுள்ள பயங்கரமான கொள்கை அழிய வேண்டும்'' என்று எடுத்துக் கூறினர். நெடுங்காலமாகத் தங்கள் உரிமைகளைப் பற்றி எண்ணிப்பார்க்காமல், நடப்பது நடக்கட்டும், நமது வேலேயை நாம் கவனிப்போம் என்ற போக்கிலே இருந்து வந்த மக்கள், மற்ற வேலேகளைப் பிறகு கவனிப்போம், இந்த விவகாரம் முதலில் தீர்க்கப்பட்டாகவேண்டும்—பாம்பைத் தடிகொண்டு அடித்துக் கொல்வதற்காக, எந்த நேரமும் தடியும் கையுமாகத் திரிந்துகொண்டிருப்பதைவிட, ஒரு பலமான முயற்சி செய்து, புற்றினை அழித்திடுவது நல்லது; இல்லே, அது கூடப் போதாது, நச்சரவம் குடிகொள்ளும் புற்றுகளுக்கு இடமளிக்கும், கள்ளிகாளான் நிரம்பிய இடத்தையே சரிப்படுத்தியாக வேண்டும் என்று தீர்மானித்தனர்.

மக்களின் பொது வாழ்வு, ஓரளவு செம்மையாகவே இருந்தது; தாங்க முடியாத வரிப்பளு அவர்கள் மீது விழவில்லே; தரித்திரர்கள் இருக்கத்தான் செய்தனர், எனினும், தொழில் வளர்ந்து, பெரும்பாலோருக்கு வசதி தந்தது! வெளிநாட்டு வியாபாரம், பல புதுச் செல்வவான்களை உண்டாக்கி வைத்தது; பல நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பு, பொது அறிவை வளமாக்கி வந்தது, புதிய கருத்துக்கள் மலருவதற்கான மனப் பக்குவம், இருந்தது. எனவே உரிமைக் கிளர்ச்சிக்குத் தேவையான உள்ளப் பாங்கு இருந்தது. தளராது உழைக்கும் தன்மையும், தன்னலம் மறுக்கும் பண்பும், எடுத்ததை முடிக்கும் ஆற்றலும், மக்கள் பணியை மேலானதெனக் கொள்ளும் மாண்பும் கொண்டவர், பலர், மாமன்ற உறுப்பினர்களாகி இருந்தனர். களம் அமைந்து விட்டது!

தந்தை மகனுக்குத் தந்துவிட்டுப் போனவைகளிலே, மற்றுமொன்று உண்டு—அது, மற்றவைகளை வெளியே கிளறிவிடக் கூடியதாக அமைந்தது. அதுதான் பணமுடை!

வரவை மீறிய செலவினுலும், புதிய போர்களுக்காக ஏற்படும் செலவினுலும், ஜேம்ஸ் திண்டாட நேரிட்டது. முதல் மூன்ருண்டுகளிலே மட்டும் ஆண்டொன்றுக்கு முப்பத்து ஐயாயிரம் பவுன் நிர்வாகச் செலவு! கடனே ஏராளம்.

மற்றச் சமயங்களிலே மாமன்றத்தைப் பற்றிக் கவலேப்படாதமன்னன், பணமுடை ஏற்பட்டதும், மாமன்றத்தைக் கூட்டி, பணத்துக்கு வழிவகை கூறுமாறு கேட்க வேண்டியதாயிற்று. இதுதான் வாய்ப்பு என்று கண்ட மாமன்றம், மன்னன் கேட்கும் தொகையைத்தர இசைவதற்கு முன்பு, ஆட்சி முறையிலே உள்ள கரைகளைப் போக்கவும், மேற்கொண்டு கரை ஏற்படாதிருக்கவும், வழிவகை கண்டாக வேண்டுமென்று வலியுறுத்தலாயினர்.

மக்களின் உரிமை மதிக்கப்படாமலிருப்பது பற்றிய கண்டனமும், மன்னன் மனம்போன போக்கிலே நடப்பது பற்றிய சீற்றமும், குடிகெடுப்போருடன் குலவுவது பற்றிய ஏளனமும், மாமன்றத்தினர் வெளியிட்டனர். மன்னன் சீறினுன். மாமன்றத்தார் மருண்டுவிடவில்லே. மரியாதை தவருமல், ஆனுல் உறுதி குறையாமல், மாமன்றத்தார் அரசனிடம் ஆட்சி முறையின் குறைபாடுகளைக் குறித்துக் கூறிவந்தனர்.

மன்னனுடைய சொந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், அவன் வசூலித்துக்கொண்டு வந்த பல்வேறு வரிகள் எல்லாம், நிர்வாகத் திறமைக் குறைவு காரணமாகத் தேய்ந்தன. கடன், 735,000 பவுளுகிவிட்டது. கிடைக்கும் வருமானத்தை, மன்னனைச் சூழ நின்று துதிபாடும் சுகபோகிகள் தின்று தீர்த்தார்கள்; எனவே ஜேம்ஸ், பணமுடையால் பாதிக்கப்பட்டான்; மாமன்றம் நிலேமையைத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டது.

அரசியல், மத இயல் எனும் இரு துறைகளிலும் மன்னன் கொண்டிருந்த போக்கை மாற்றிக்கொண்டாக வேண்டும், என்று வலியுறுத்தப்பட்டது,

மன்னன் சார்பில், சாலிஸ் பரிபிரபு, கடன் தீர்க்க ஆறு இலட்சம் பவுன் தேவை என்றும் வரித்தொகையை இரண்டு இலட்சம் பவுன் அதிகமாக்க வேண்டுமென்றும், மாமன்றத்தாரிடம் கேட்டார். மறுத்தனர்; ஜேம்ஸ் கோபம் கொண்டான்; தத்துவ நோய் கொண்டவனல்லவா, உடனே மாமன்றத்தாரை வரவழைத்து, மன்னனுடைய அதிகாரம் எப்படிப்பட்டது, அதன் மகிமை எத்தகையது;

அதைக் கட்டுப்படுத்த முயல்வது எவ்வகையான குற்றம் என்பதை எல்லாம் விளக்கினன். விளக்கினதாக மன்னன் எண்ணிக்கொண்டான், மிரட்டல் என்று மாமன்றம் கருதிற்று; பணியவில்லை.

பல முறை சமரச ஏற்பாடுகள் பேசப்பட்டன; ஒவ்வொரு முறையும் மாமன்றத்தின் குரலிலே உறுதி வளர்ந்தது. மன்னன் எக்காரணம் கொண்டும் மதத்துறையிலே மக்களுக்குப் பிடிக்காத மாறுதல்களைச் செய்யக்கூடாது என்றும், எந்த அதிகாரியை நியமித்தாலும் மாமன்றத்தாரைக் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினர், மாமன்றத்தாரின் குரலிலே உறுதியும் வளர்ந்தது, அவர்களின் அறிவிப்புகளின் வகையும் வளரலாயிற்று.

ஐந்துமுறை மாமன்றம் கூட்டப்பட்டது, கசப்புவளர இது உதவிற்றே தவிர, பலன் ஏதும் ஏற்படவில்லை. மன்னனுடைய போக்கை நாடு அறிய, இந்த மாமன்றக் கூட்டங்கள் பயன்பட்டன. மக்களின் உரிமைகளைக் காக்க அமைக்கப்பட்ட மாமன்றத்தை மன்னன் அலட்சியப் படுத்துவதுகண்டு, மக்கள் கொதிப்படைந்தனர்; அவர்கள், போர்க்கோலம் பூண்டு கிளம்புவதை மகனுக்குக் காட்சியாக்கி வைத்தான் ஜேம்ஸ்.

மாமன்றம் பணம் திரட்டித் தர மறுத்தால் என்ன? மன்னன் கேட்டால் மக்கள் தரத்தானேவேண்டும்? மாமன்றத்தின் தயவு ஏன்? என்று எண்ணினன் ஜேம்ஸ். உடனே, புதிய வரிகள், கட்டாயக் கடன்கள், இனமகள், என்று வகை வகையாக முறைகளை வகுத்து, மக்களிடம் பணம் பறிக்கத் தொடங்கினன். மன்னன், எந்த அளவுக்குச் செல்லத் துணிந்துவிட்டான் என்பதை மட்டுமல்ல, மன்னராட்சி முறை எவ்வளவு தூரம் கேடு உண்டாக்க முடியும் என்பதை இந்தச் சம்பவங்கள் விளக்கலாயின. மன்னனைத் திருத்துவது என்ற சாதாரண நோக்கம், மன்னராட்சி முறையையே திருத்தியாகவேணடும் என்று வளர்ந்தது; கூர்த்த மதிபடைத்த தீவிர நோக்குடையார் மன்னராட்சி என்ற முறைதான் எதற்கு என்றே எண்ணத் தொடங்கினர்.

சரக்குகளின்மீது ஏற்றுமதி இறக்குமதி வரிவிதித்தான் மன்னன். இது எலிசபெத் இராணியார் விதித்த போதே சிறிது குமுறல் இருந்தது, மக்கள் மனக் குறையை அறிந்து, இந்த வரி முறையிலே மாறுதல் செய்ய எலிசபெத் உட்பட்டதுண்டு. ஜேம்ஸ் இந்த வரியை விதித்ததும் மாமன்றத்தின் அனுமதியின்றி விரி விதிப்பது அடாது என்ற கண்டனம் பிறந்தது. மக்களின் எழுச்சியின் துவக்கக் கட்டம் அது, எனவே கண்டனம் பிறந்தபோதிலும், மன்னனல் வரியை வசூலிக்க முடிந்தது. பேட் என்ற ஒரு வியாபாரி துணிந்து, இந்த வரியைக்கட்ட முடியாது என்று கூறி வழக்காடினன். அரசனுடைய ஆணைக்கு அடங்கிய நீதிபதிகள், துறைமுகப் பட்டினங்களெல்லாம அரசனுக்குச் சொந்தமானவை, எனவே அங்கெல்லாம், சரக்குகள் நுழைவதற்கும், மக்கள் செல்வதற்கும் மன்னனுடைய அனுமதி தேவை; இதற்காக மன்னன் கட்டணம் கேட்கலாம்; வரி வசூலிக்கலாம், அனுமதி தரக்கூட மறுத்துவிடலாம், என்று தீர்ப்பளித்தனர். மன்னன் மகிழ்ந்தான். மக்கள் இந்தத் தீர்ப்பு எவ்வளவு கேடான விளைவுகளைத் தரவல்லது என்பதை எண்ணி வருந்தினர். பிரிட்டன், வெளி நாடுகளுடன் வியாபாரம் செய்துவந்தது, செழிப்பான வியாபாரம; எனவே துறைமுக வரிபோட்டால், தொகை தொகையாக வரி குவியும்; இதனை மாமன்றத்தின் உதவியின்றி மன்னன் பெறமுடியுமென்றால், பிறகு மாமன்றத்தை ஏன் மதிப்பான், மாமனறம் மதிப்பிழந்தால், மக்களின் உரிமை என்னகதி ஆவது! இதை எண்ணி மக்கள் மருண்டனர், மன்னனே ஆண்டொன்றுக்கு எழுபதினாயிரம் பவுன் வரி வருமானம் கிடைப்பதறிந்து மகிழ்ந்தான்.

இந்த வெற்றி, மன்னனுடைய ஆணவத்தையும்

## கோடரிக்காம்பு

புது நிருபர்:— ரொம்ப 'ஓவர்'டா, நாம இவனுக்குத் தருகிற விளம்பரம்.

பழைய நிருபர்:— போடா, மண்டு! அவனுக்கு யார்டா விளம்பரம்தர்ரா! அதுவா நம்மோட வேலே. அந்தப் பயல்களை இவன் ஏசிப்பேசினு, அதை வெளியிட்டு வேடிக்கை காட்டறோம், வேறே என்ன, இவனையா மகா மேதாவி, வீரன், தீரன், தியாகி அப்படி இப்படின்னு புகழ்ந்து எழுதறோம்.

புது நிருபர்:— அதுசரி, ஆனலும் நாள்தோறும், பேசினதை வெளியிட்டா, பெரிய விளம்பரமாயிடுமே, அப்புறம், இது ஒரு புதிய தலைவலியாப் போயிடுமோன்னு நேக்குச் சந்தேகம்.

பழைய நிருபர்:— அசடா! அவன், கக்கவேண்டியதைக்கக்கியானதும்,யார் அவனைச் சட்டை செய்திண்டிருக்கப்போரு. மரத்திலே தானேடா, கோடரிக்குப்பிடி! என்னத்துக்குக் கோடரி பயன் பட்றது, மரத்தை வெட்டத்தானே!!

மக்களுடைய அச்சத்தையும் வளர்த்தது, ஆனல் பிரச்னை தீரவில்லை. பணம் மேலும் தேவைப்பட்டது. ஐரோப்பாவில், ஜேம்ஸ் மன்னனுடைய மருமகன், சமர்ச்சுழலில் சிக்கிக்கொண்டிருந்தான்; அவனுக்கு உதவி செய்யப் பணம் ஏராளமாகத் தேவைப்பட்டது. மாமன்றமோ மறுக்கிறது. எனவே, ஜேம்ஸ், மக்கள், கட்டாயமாகக் கடன் தர வேண்டுமென்றுன் — இனம் கொடுக்கச் சொல்லி வலியுறுத்தினன்—இந்த ஆகா வழிகள் அனைத்தையும் அவனுடைய அருமைத் திருக்குமாரன் சார்லசும், கற்றுக் கொண்டான். தந்தை விதைத்தான் மகன் அறுத்தெடுத்தான்!

பணமுடையைத் தீர்த்துக்கொள்ள, மாமன்றத்திடம் பக்குவமாக நடந்துகொள்வது முறையாயிருக்க, மன்னன் மக்களிடம் பல்வேறு முறையில் பணத்தைப் பறித்து, அவர்களின் கோபத்தைக் கிளறியதுடன், மகனுக்குத் திருமணம் செய்வித்து, அதன் மூலம் ஏராளமான பணம் பெற முடிகிறதா என்று பரீட்சை பார்க்கலானன். இந்தச் செயலாலும், மக்களுடைய கோபம் வளர்ந்தது.

பிரிட்டிஷ் மக்கள், கத்தோலிக்க மார்க்கத்தை நீக்கிவிட்டு பிராடெஸ்ட்டென்டு மார்க்கத்தை அரச மார்க்கமாகக் கொண்டிருந்தனர். எனினும், கத்தோலிக்கர்கள், இழந்த இடத்தைப் பிடிக்க எப்போது வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். இதனல், பிரிட்டிஷ் மக்களில் பெரும் பாலாருக்குக் கத்தோலிக்கரிடம் கடுங்கோபம், சந்தேகம், பயமும் கூட! எனவே, மார்க்கத் துறையிலே ஒரு சிறு மாறுதல் கூறப்பட்டாலும், கத்தோலிக்கரின் கரம் அதிலே இருப்பதாக எண்ணிக் கண்டிப்பர்.

கத்தோலிக்கருக்கும் பிராடெஸ்ட்டெண்டுகளுக்கும் இடையே கிலேசம் இருந்ததுடன், பிராடெஸ்ட்டென்டுகளுக்குள்ளாகவே, பிரிவுகளும் இருந்தன.

ஆசாரக்கட்சி ஒன்று, அரசமார்க்கத்தை அப்படியே

பின்பற்றும் கட்சி மற்றென்று, இரண்டுக்கும் இடையே, கசப்பு, கிலேசம், சந்தேகம்.

ஆசாரக்கட்சிக்கும் மற்றதுக்கும் இடையிலே, அடிப்படையான கொள்கை மாறுபாடு ஏதும் கிடையாது; எனினும், இரு பிரிவுகளுக்குள்ளும் விரோதம் பீறிட்ட வண்ணமிருந்தது. தொழுகை முறையிலே சில வேறுபாடுகள், துதிபாடுவது பற்றிச் சில தர்க்கங்கள், இவைகளே வித்தியாசம், எனினும் இவை தலைபோகும் விதமானதாகக் கருதப்பட்டன. சங்கீதம், நாடகம், பொழுதுபோக்கு, வேடிக்கை, இவைகளெல்லாம் கூடாது. சன்மார்க்கத்தைக் கெடுத்துவிடும் என்பது ஆசாரக் கட்சியின் எண்ணம். எப்போதும் ஆண்டவன் நாமத்தைஜெபித்துக் கொண்டிருக்கவேண்டும்கண்ணுக்கும்கருத்துக்கும்விருந்து தேடிக் கெட்டலையலாகாது, அப்போதுதான் உள்ளத் தூய்மை ஏற்படும், தூய உள்ளத்திலேதான் ஆண்டவன் உறைவார் என்றனர் இந்தத் தூய்மையாளர்கள்! குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளிலே, வேடிக்கையான பொழுது போக்குகள் கண்டிப்பாக இருத்தலாகாது என்று வலியுறுத்தினர். அத்தகைய பொழுது போக்கிலே ஏதும் தவறு இல்லை, என்று வாதாடினர், அரச மார்க்கத்தினர், இந்த 'மாறுபாடு' ஒரு பிரிவை மற்றோர் பிரிவு, வெறுத்து, எதிர்க்கும் அளவுக்கு முற்றிவிட்டது.

இந்த மதத்துறைக் கட்சியினர் அனைவரும், ஒருவரை ஒருவர் பாபிகள் என்றும், வேத நிந்தகர்களென்றும், நாத்திகன் என்றும் கண்டித்துக்கொண்டனர்.

ஆச்சாரக் கட்சிக்காரன், பிராடெஸ்டென்டின் மற்றோர் பிரிவினனையும் கத்தோலிக்கனையும், நாத்திகன் என்பான், பிராடெஸ்ட்டென்டோ, கத்தோலிக்கரை கர்த்தரின் அருளின் பெருமை அறியார், நாத்திகன் என்று ஏசுவான், கத்தோலிக்கரோ, தாம் தவிரப் பிறர் நாத்திகரே என்று கூறினர்.

இந்தச் சூழ்நிலையில் ஜேம்ஸ் ஆளவந்தான்—அவனைச் சுற்றிநின்று முகமன் கூறிய, ஸ்காத்லாந்து நாட்டுக் கத்தோலிக்கர்கள், தங்கள் நிலையை உயர்த்தும்படி கேட்டுக்கொண்டனர்; அதற்கென்ன பார்க்கலாம் என்று மன்னன் உபசாரமொழி புகன்றான்.

பிராடெஸ்ட்டென்டுகளுக்கு இது திகில் கொடுத்தது–மன்னன் மீண்டும் நாட்டிலே கத்தோலிக்க மார்க்கத்துக்கு ஆதிக்கமளித்துவிடுவானோ—அங்ஙனம் நேரிட்டால் தங்கள் நிலை குலையுமே என்பது அவர்கள் அச்சம். மாமன்றத்திலே, இந்தப் பிரச்னை பலமான புயலைக் கிளப்பிற்று. மன்னன் எக்காரணம் கொண்டும் கத்தோலிக்க மார்க்கத்தைப் புகுத்துவதில்லை என்று உறுதி அளிக்கவேண்டும் என்று மாமன்றம் கேட்டது. மன்னனுக்குக் கத்தோலிக்க மார்க்கத்தைப் புகுத்துவதா கூடாதா என்ற **சிக்கல் மனதில் எழவில்லை. நம்மை, நாடாளும் மன்னனை, நாதன் அருள் பெற்றவனை, இந்த மக்கள், கட்டுப்படுத்துவதா, அவ்வளவு ஆணவமா! என்ற எண்ணம்தான் எழுந்தது.**

கத்தோலிக்க மார்க்கத்தை நாட்டு மக்களில் **பெரும்**பாலானவர்கள் விரும்பாதபோது, மக்களின் **விருப்பு** அறிந்து நடக்கவேண்டும், முறைப்படி மன்னனாகிய **நான், அந்த மார்க்கத்தைப் புகுத்துவேன்** என்று **கனிவுடன்** மன்னன் பேசவில்லை. இந்த மக்கள் இவ்வளவு **துணிவு** பெற்ற காரணம் என்ன? எனக்கல்லவா, **நெறியும் முறை**யும் கற்றுத்தர முனைகிறார்கள்! **மன்னனுக்கு மதிபுகட்டு**வதா மக்கள் கடமை! என்று எண்ணிக் **கோபம்** கொண்டான்:

கத்தோலிக்க மார்க்கம் மீண்டும் எங்கே **புகுந்து** விடுமோ என்ற அச்சம் மக்கள் மனதிலே **அதிகமாக** வளருவதற்கான ஒரு சம்பவமும் நடைபெற்றது. **அது,** ஜேம்ஸ் மன்னன் பட்டத்துக்கு வந்து இரண்டு **ஆண்டு**களுக்குள்ளாகவே. ஜேம்ஸ் மன்னன் மூலம் **தனியான** சலுகைகள் கிடைக்குமென்று எதிர்பார்த்து, **எமாந்த கத்**தோலிக்கர் சிலர், ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த **ஃபாக்ஸ்** என்பானைக் கருவியாக்கி, மாமன்றத்தினரும் **பிரபுக்கள்** சபையினரும், மன்னனும் ஒன்றாகக் கூடிடும் நாளன்று, வெடிமருந்துகொண்டு, கட்டிடத்தைத் **தகர்த்துவிடுவது** என்று சதி செய்தனர். மன்னனும் பிரபுக்களும், மாமன்றத்தாரும் படுகொலை செய்யப்பட்டதும், பிரிட்டனில் **இங்**கும் அங்குமாக, ஆறுல் செல்வத்துடன் உள்ள **கத்தோ**லிக்கப் பிரபுக்கள் படை திரட்டிக்கொண்டு சென்று. **அர**சைக் கைப்பற்றி, கத்தோலிக்க மார்க்கத்தை **மீண்டும்** புகுத்துவது என்பது, சதித்திட்டம். **இது கண்டுபிடிக்கப்**பட்டது—சதிகாரர்கள் கொல்லப்பட்டனர்.

ஏற்கனவே இருந்த அச்சம் இதனுல் பல **மடங்கு** அதிகமாகிவிட்டது, கத்தோலிக்கரைக் **கருவறுக்கவேண்**டும் என்ற துடிதுடிப்பு அதிகமாகிவிட்டது. **அந்தச் செய**லில் மன்னன் இறங்கினுல், அவன் பக்கம் **நின்று பணி**யாற்றுவது என்ற உறுதியைத் தெரிவிக்கும் **வகையில்,** மாமன்றம் மன்னன் கேட்டபடி, தாராளமாகவும் **ஏராள**மாகவும் பணம் தரக்கூட முன்வந்தது. **மன்னனே இந்தக்** குறிகண்டு மகிழ்ந்து. மாமன்றத்தைத் **தன் துணைக் கருவி**யாக்கிக்கொள்ளக்கூட முயலவில்லை. **வாதிட்டுப் போரிட்டு** ஐந்து முறை கூட்டிக் கலைத்து, மாமன்றத்தின் **வெறுப்**பைக் கிளறினன். அத்துடன் நிற்கவில்லை, **தன் மக**னுடைய திருமண பிரச்னை மூலம், **மக்களுடைய மருட்**சியை அதிகமாக்கினன்.

(தொடரும்)

SANKARAN PROGRESSIVE TUTORIALS
TIRUCHI
S.P.T.
SANKARAN
PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P.O., TIRUCHIRAPALLI.

RE-OPENS: 10th JUNE 1955

S. S. L. C., INTER, B. A.. etc.,
(All Parts & Groups)

The Greatest living poet,
BHARATHI DASAN
WILL TEACH YOU TAMIL!

Mrs. JUDITH LOUIS, B.A. (Hons) Vice-Principal.
N. J. DEVADAS, M A., Principal.

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 13 ] 12—6—55 [ இதழ் 49

# பாதியளவாவது....!

—[]—

புதிய வரிகள் போடப்படுமாம்! அமைச்சர் சுப்ரமணியம் அதற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளாராம்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இரு நூறு கோடி ரூபாய்களை, மாகாணங்கள் செலுத்தவேண்டும் என்கிற திட்டக் கமிஷனின் அறிவிப்பையொட்டி இந்த ஆலோசனை உண்டாகியிருக்கிறதாம். ஆண்டு ஒன்றுக்கு சுமார் நான்கு கோடி ரூபாய்கள், அதிகவரி கட்ட ஏற்படலாமாம், சென்னை மாநில மக்களுக்கு.

வரிகட்டக் கூடிய வழிகள் என்னென்ன! மக்கள், தயாராயிருக்கின்றனரா!!—எனும், பிரச்சனை ஒரு புறமிருக்க, நாட்டில் அரசுக்குச் செலுத்தப்படும் வரி இனங்கள் அதிகமாக இருப்பதாகச் சகல பொருளியல் அறிஞர்களும் சொல்லி வருகிறார்கள். விற்பனைவரி! நில வரி!!—இரண்டையும் தவிர்த்து, ஏனைய வரி இனங்கள் யாவும் டில்லி சர்க்காரிடமே இருப்பதை, நம் நாட்டினர், அறிவார்கள். வருமான வரியும், வர்த்தக மூலம் வரும் வரியும் டில்லியின் வருவாயினங்கள். வசதியுள்ளோர் செலுத்தும் வரிகள் இவை! நிலவரியும் விற்பனை வரியுமே, ஏழை மக்களின் வரிகள்!! எப்படி, மாகாணங்கள் 'மடிப்பிச்சை' கேட்குமளவிலும்,மத்தியபீடம் அதைச் செய்யுமென்று எதிர்பார்த்திருக்கும் ளவிலும் இருந்து வருகிறதோ அதே நிலைமைதான் வருவாய் விஷயத்திலும். டில்லி, மாளிகை வாசிகள் பீடம்! மாகாணங்கள், மயானக்காடுகள்!! இந்நிலையில், விவசாயப் பொருளின் விலையோ, வீழ்ந்துகொண்டே உள்ளது. தவிக்கும் உழவன், அலையும் பொதுமக்கள், யார்தலையில் கை வைத்து அதிக வரியை வசூலிக்கப் போகிறார்களோ, தெரியவில்லை.

தேவைப்படுவது ரூ. 200 கோடி! கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு இராணுவத்துக்கென நேரு சர்க்கார் செலவழித்துக் கொண்டிருக்கும் தொகை!! —இந்த இரு நூறு கோடி ரூபாயில் சரிபாதி அளவுககுக் குறைத்தால்கூட ஆண்டுக்கு நூறு கோடி கிடைக்கும்—ஐந்தாண்டுகளில், 500 கோடி ரூபாய் கிடைக்க முடியும், அப்படிச் செய்தால், புதிய வரிகளை மக்கள், தாங்க வேண்டியஅவசியமும், எப்படி வசூலிப்பது என்கிற சங்கடமும் ஏற்படாமல் தவிர்க்கலாம். 'திறமை'யால் மந்திரியாக வந்ததாகச் செப்பித்திரியும் நிதி அமைச்சர் சுப்ரமணியம், தன்னுடைய 'தியாகம்' 'திறமை' ஆகியவைகள் மூலம், மத்திய பீடத்தை இணங்கச் செய்வாரா!

அப்படி யோசனை கூறச் சென்றால், நேரு என்ன சொல்வாரோ—என்கிற அச்சமும் தேவையில்லை. ஏனெனில் கடந்த மே 31-ல் டில்லியில் பேசிய நேரு பண்டிதர் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார், "இந்தியாவை இனி எவரும் தாக்குவார்கள் என்கிற பயம் எனக்கு இல்லை!" என்பதாக. பயமேயில்லாத போது, வருகின்ற வருமானத்தில் பாதித் தொகையை இராணுவத்துக்கென அழிக்கவேண்டிய அவசியமே, இல்லை. போலிக் கவுரவத்துக்காக, இந்தியா ஒரு இராணுவ நாடாக இருக்க வேண்டுமா என்றால் அது பற்றியும் அவர் வெளியிட்டிருக்கிறார், "இந்தியா ஒரு பெரிய இராணுவ பலமிக்க நாடாக விளங்கவேண்டுமென்பது அல்ல என் விருப்பம்" அவரே அப்படி அறிவிக்கும் போது, நிச்சயம் மறுப்பு இருக்க முடியாது! ஆகவே, இப்போது செலவழிக்கப்படும் தொகையில் — முழுவதும் கூட அல்ல — பாதியளவாவது குறைக்கும்படி, மாகாண சர்க்கார், டில்லிக்குயோசனை கூறலாம். 'அதெப்படி? நேரு, சொல்லலாம் ஏதோ ராஜ தந்திரம் காரணமாக! அதற்காக இராணுவத்தைக் கலைத்துவிட முடியுமா? திடீரென பாகிஸ்தானோ, அமெரிக்காவோ பாய்ந்தால் நாட்டைப் பாதுகாக்கப் படைகள் வேண்டாமோ!' என்று இங்குள்ள அதிதீவிர தேசிய நண்பர்கள் சிலர் கேட்பினும் கேட்கலாம்—அவர்களுக்கும் நேரு, பதிலளிப்பதுபோல தெரிவிக்கிறார்—"அப்படி யாராவது இந்தியாவைத் தாக்க முற்பட்டாலும், நிச்சயம் அடிபணியாது. தடிகளாலும் கற்களாலும் எதிர்த்து தன்னைக் காத்துக்கொள்ளும் வலிமையிருக்கிறது, இந்தியாவிடம். அந்த உணர்ச்சி, இந்தியாவெங்கனும் இன்றைய தினம் பரவிவிட்டது."

இப்படி அவரே உறுதியாக நம்புகிறபொழுது, இராணுவத்துக்கென பாதிக் கஜானாவைக் காலிசெய்து கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. ஆயினும் நேருபிடம், தொடர்ந்து செய்துவருகிறது! அவருக்கு எவ்வளவோ வேலை—இதையெல்லாம் கவனித்துத் தீர்த்திட ஒரு வேளை, நேரம் இல்லாமலும் இருக்கக் கூடும். ஆகவே, 'திறமையாலும்' தியாகத்தாலுமே' மந்திரியாகி விளங்குவதாகக் கூறும் நிதி அமைச்சர் சுப்ரமணியம், அவசியம் டில்லி சென்று, ரஷ்யா சென்றிருக்கும் நேரு திரும்பியதும், பாதியளவாவது இராணுவச் செலவைக் குறைத்திடச் சொல்லி வற்புறுத்துவார் என எதிர்பார்க்கிறோம்! 'திறமை'சாலியான அவர், நிச்சயம் புது வரிகள்போட்டு மக்களிடமிருந்து இந்த நான்கு கோடியையும 'கறக்க' எண்ணமாட்டார் என்றும் நம்புகிறோம்!!

★

## வாழ்க, வாணன் - ஜயலட்சுமி!

தோழர் ப. வாணன் (ப. வேலாயுதம்) அவர்கள், 1—6—55 அன்று காலை மன்னார்குடியில் தோழியர் விஜயலட்சுமியை, தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். விழாவுக்கு, மன்னார்குடித் தோழர் பாலகிருஷ்ணனார் தலைமை தாங்க, தோழர்கள் கே. எஸ். எஸ். இராசன், ஞானசிகாமணி, அண்ணாதுரை ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. எ. மதியழகன், என். வி. நடராசன், க. அன்பழகன், இராம. அரங்கண்ணல், ஆர். சௌரிராசன், இரா. செழியன், என். எஸ். இளங்கோ, எஸ். எஸ். பி. லிங்கம், எஸ். வி. லிங்கம், எ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அ. பொன்னம்பலனார், ப. நாராயணசாமி, கே. ஆர். ஜி. பால், பேராவூரணி அடைக்கலம், பண்ணை முத்துகிருஷ்ணன், ஜி. பராங்குசம், முதலிய கழகத் தோழர்களும, உறவினர்களும் திரளாக வந்திருந்தனர்.

அனைவருக்கும் மணமகன் வாணன், தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்.

மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்து மடல்களும் நண்பர்களால் அளிக்கப்பட்டது.

புதுமணத் தம்பதிகளை, வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்




தம்பி,

சில தினங்களுக்கு முன்பு, நேரு பண்டிதர் அரித்துவாரம் எனும் ஊருக்குச் சென்றிருந்தார்; இமய மலையின் அடிவாரத்திலே இருக்கிறது இந்த ஊர்; இந்துக்கள் இதைப் புண்யஸ்தலம் என்று கொண்டாடுகிறார்கள்; இங்குவந்து இமயத்திலே இருக்கும் ரிஷிகேசம் போன்ற தலங்களுக்குச் செல்கிறார்கள்; சிறிய ஊர்தான். நான் அங்கு பத்து நாட்களுக்குமேல் தங்கியிருந்திருக்கிறேன், பெரியாரின் அன்புக்குப் பாத்திரனாக இருந்தபோது! —அந்தப் பழைய நாட்களில். அப்போது நான் 'விடுதலை'யில் எழுத்தாளன், பெரியாருடன் வரும் பேச்சாளன்; ஆமாம், மறந்துபோகிறேன் பார் தம்பி, திராவிடர் கழகச் செயலாளனாகவும் இருந்து வந்தேன்; பார்ப்பனரை இந்த நாட்டைவிட்டு ஓட்டும் ஒரே ஒரு அபாரசேவை செய்வதற்காகவே இன்று அல்லும் பகலும், கடுமையான நோயையும் தாங்கிக்கொண்டு எவ்வளவோ இலாபகரமான தொழில்கள் வருந்தி அழைத்தும், வருக! வருக! என்று பலர் பணத்தைக் கொட்டி ஆசை காட்டியும், இலட்சியத்தைக் கைவிடேன்! துரோகிகளை ஒழித்துக்கட்டியே தீருவேன்! என்று முழக்கம் (ஆறு திங்களில் நான்கு முறையேனும்!) செய்துகொண்டும், நாள் தவறாமல் எழுதிக்கொண்டும் வரும் சிலம்பக் கூடத்தார், என்னைக் கேலி பேசியும், பெரியாரைப் பின்பற்றும் 'பேதைமை'யை எடுத்து விளக்கிக் கொண்டும், இதை நான் உட்கொள்வதற்காக வேண்டி இடையிடையே சுவையுள்ள விருந்து (அன்புடன் தான், மறக்கமுடியுமா!) அளித்துக்கொண்டும் இருந்த நாட்கள்; திடீரென்று ஒருதினம். பம்பாயிலிருந்து எனக்கோர் தந்தி வந்தது, உடனே கிளம்பி அரித்துவாரம் வந்து சேரவும் என்று. தந்தி தந்தவர் பெரியார்; அவர் பம்பாய்ப் பகுதி சென்று, அங்கிருந்து அரித்துவாரம் சென்றுவிட்டு, வடநாட்டிலே வேறு பல ஊர்கள் போகத் திட்டமிட்டிருந்தார்போலிருக்கிறது, எனக்கென்ன தெரியும்; யாருக்குத்தான், எப்போதுதான் அவர் போடும் திட்டம், அவராகச் சொல்லுமுன் தெரிகிறது!

அரித்துவாரம் வந்து சேர் — எனக்கு இப்படி ஒரு தந்தி.

என் சுபாவம், உனக்குத் தெரியும், ஏன், ஏறக்குறைய கழகத் தோழர்கள் அனைவருக்கும் தெரிந்தது தானே. பக்கத்திலே உள்ள ஆற்காடு போவதானாலும், நாலு நண்பர்கள் கூட வேண்டுமே எனக்கு, அப்படிப் பழகிப்போன என்னை, அரித்துவாரம் வரச் சொல்கிறார்; என்ன செய்வது, கிளம்பினேன்; தோழர் குருசாமி இரயிலடி வந்திருந்ததாக நினைவு.

பத்து நாட்கள் அரித்துவாரத்தில் இருந்தோம்—ஒரு ஐயர் வீட்டில்!

அவர், காலஞ்சென்ற பேரறிஞர் M. N. ராய் அவர்களுடைய இயக்கத்தவர், எனவே, எங்களை அன்புடன் தமது இல்லத்தில்வைத்து, உபசரித்தார்.

உங்களில் பலருக்குத் தெரிந்திராது தம்பி! பெரியார் அங்குதான், வால்மீகி இராமாயணம்பற்றிய குறிப்புரைகள் தயாரித்தார், அவர் சொல்லச் சொல்ல நான் எழுதின கவனமிருக்கிறது.

அந்த அரித்துவாரம், 'சாதுக்களின்' கோட்டை! எந்தத் தெருவுக்குச் சென்றாலும், சன்யாசிகள்! எவ்வளவு 'கெம்பீரமாக' நடந்து செல்கிறார்கள் தெரியுமோ! அவர்களும் சரி, கொழுத்துக் கிடக்கும் பெரிய பெரிய பசுக்களும் சரி. அரித்துவாரத்து வீதிகளிலே நடமாடும் உரிமை தமக்கே என்ற தீர்மானத்துடன் இருப்பதுபோலத்தான் தோன்றும்.

கங்கை — நடுப்பகல் இரண்டு மணிக்குக் கால்வைத்தாலும், 'ஐஸ்' போல இருக்கிறது, கொட்டுகிறது.

அரித்துவாரத்தில், ஆற்றோரத்தில் அழகான சோலைகள்—பழமுதிர் சோலைகள்! சோலைகளை வேலிகளாகக் கொண்ட பெரிய மடங்கள். ஒவ்வோர் மடத்திலும், நூற்றுக்கணக்கான சாமியார்கள்; உலக மாயையை மிக நன்றாக உணர்ந்து உலகோருக்கு உபதேசம் செய்யும் 'புனிதத் தொண்டு' புரியும் அவர்களுக்காக நாள் தோறும், மூட்டை மூட்டையாகக் கோதுமை மாவும், டின் டின்னாக மணம் கமழும் நெய்யும்! இந்த மடங்களில் ஒரு குறையும் இருத்தலாகாது என்பதற்காக ஏராளமான 'சொத்து' சாசனப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாலை வேளைகளிலே, பெரியார் உலாவச் செல்வார், சாலையில்; உடன் நான் செல்வேன். வெண்ணிறத் தாடி; பொன்னிற மேனி; ஆரஞ்சுநிறச் சால்வை. நான், கொட்டும் குளிருக்குப் பயந்து, முரட்டுத் துணிச் சட்டை போட்டுக்கொண்டு, அதற்குள் கரங்களை விட்டுக்கொண்டு, கைகட்டியவண்ணம், அவர் பின்னால். சாது சன்யாசிகளைக் காண்பதையே வேலையாகக்கொண்ட அந்த நாட்டு மக்கள், அரித்துவாரம் இதுவரை காணாத, மகிமை பொருந்திய குருமகான், தன் பிரதம சீடனுடன் செல்கிறார் என்று எண்ணிக்கொண்டு, பக்தியுடன், கைகூப்பித் தொழுவர்; இப்போதும் மனக்கண்

முன்னால் அக்காட்சியைக் காண முடிகிறது; எங்களுடன் மணி இருப்பார் — ஓஹோஹோ! மணி என்றதும், ஆச்சரியத்தால் கண்களை அகலத் திறக்கிறாயா தம்பி! விடுதலை அச்சகத்தில் மணி என்றோர் அச்சுக் கோர்ப்போர் இருந்தார், அவர் பெரியாருக்குப் பணிவிடைசெய்வதற்காக வந்திருந்தார், அவரைக் குறிப்பிட்டேன்; அப்போது ஈ.வெ.ரா. மணி அம்மையார்பற்றிய நிழலுருவச் செய்தியும் கிடையாது.

இவ்வளவு மடங்கள்—கவாத்துக் கொடுத்து காக்கி உடை அணிவித்து, கையில் துப்பாக்கி கொடுத்துவிட்டால், பட்டாளத்திலே 'சர்தார்களாக'க்கூடிய உடற்கட்டமைந்த சன்யாசிகள், கூட்டம் கூட்டமாக—அவர்களின் பராமரிப்புக்காக இலட்சக்கணக்கில் பொருட்செலவு—அவர்களோ, இகலோகத்தின் இழி தன்மைபற்றியும் பரலோகத்தின் பெருமைபற்றியும் உபதேசம்' செய்வர். இந்த விசித்திரக் காட்சி, என் உள்ளத்தில், ஓராயிரம் எண்ணங்களைக் கிளறும். இப்படியும் ஒரு நாடா? ஊரார் உழைப்பைத் தின்று கொழுத்துக் கொண்டு, முக்திக்கு வழிகாட்டுவதாகக் கூறிக்கொண்டு ஒரு 'பட்டாளமே' இருக்கிறதே! எந்த நாட்டிலாவது, இப்படி ஒரு பயனற்ற கூட்டத்தை அனுமதிப்பார்களா! இங்கு அடிதொழுதுகொண்டிருப்பதைப் பெறற்கரிய பேறு என்றல்லவா கருதுகிறார்கள்; வேதனை நிரம்பிய விசித்திரமாக இருக்கிறதே, என்றெல்லாம் எண்ணிக் கொள்வேன்.

சம்சாரி உழைத்து
சன்யாசி கொழுக்க
**தருமம்புரி எனல் ஆஸ்திகமா?**
**அது சரியில்லை என்பது நாஸ்திகமா?**

என்று உடுமலை நாராயணக் கவி, 'சொர்க்கவாசல்' படத்துக்குப் பாடல் தீட்டினார்; K. R இராமசாமி பாடினார், நானும் நண்பர்கள் சிலரும் கேட்டு இன்புற்றோம்; நீ கேட்டிருக்கமுடியாது தம்பி, 'சென்சார்' அதைக் கத்தரித்துவிட்டு, பாரதப் பண்பாட்டைக் காப்பாற்றிவிட்டதாகப் பூரிப்படைந்தனர்; அந்தப் பாடலும் அதற்குரிய காட்சியும் தயாரிக்கப்பட்டபோது, எனக்கு அரித்துவாரக் காட்சி நன்றாகத் தெரிந்தது.

நேரு பண்டிதருக்கு, இந்த 'மாமிச மலைகளை'க் கண்டதும், உண்மையிலேயே கோபம் கொப்பளித்திருக்கிறது; ஆனால், 'பாமர' மக்களின் அன்பை இழக்க நேரிடுமே என்ற அச்சம், அவரை வாட்டி வதைத்தும் இருக்கிறது; எனவேதான் அவர், அரித்துவாரத்தில் கண்ட 'ஆள் விழுங்கிகளை'ப் பற்றிய கண்டனத்தை, வேறோரிடம் சென்று, ஜாடைமாடையாகக் குறிப்பிட்டுப் பேசினார்—**80** இலட்சம் சாதுக்கள் இருக்கிறார்கள் நமது நாட்டில் — இவர்களில் ஒரு சிலர் உண்மையானவர்களாக இருக்கலாம் —பெரும்பாலானவர்கள் பிறர் உழைப்பைத் தின்று கொழுப்பவர்கள்—இவர்கள் நாட்டுக்குப் பெரியதோர் சுமை—நஷ்டம்— என்ற கருத்துப்பட நேரு பண்டிதர் பேசினார்.

அதுமட்டுமல்ல! அரித்துவாரத்தைப்பற்றியே அலட்சியமும் அருவருப்பும் கலந்தமுறையில் குறிப்பிட்டார்.

அவர் பேசினார், "அரித்துவாரம் இந்துக்களின் புண்யஸ்தலமாகக் கருதப்பட்டு வருகிறது" என்று

கவனித்தாயா, தம்பி! அவர் பேச்சை. அரித்துவாரம் புண்யஸ்தலம் என்று கூறவில்லை — அப்படிக் கருதப்பட்டு வருகிறது! நான் கருதவில்லை, பாமரமக்கள் கருதுகிறார்கள் அவ்விதம் என்ற கேலி, அதிலே தொக்கி நிற்கிறது, தெரிகிறதா. அவர் அப்படி ஒன்றும் கேலி பேசவில்லை, நீயாகக் கற்பனை செய்கிறாய் என்று பக்தர்களும் கூறக்கூடும், காங்கிரஸ் நண்பர்களும் சொல்லக்கூடும். ஏன் வீண் சந்தேகம், பண்டிதரின் பேச்சு முழுவதையும் கூறுகிறேன், அப்போது விளக்கமாகிவிடுகிறது!

"அரித்துவாரம் இந்துக்களின் புண்ய

## ஐயாவுக்கு யோகம்!

**பில் கலெக்டர்:**— என்ன பிச்சை! நம்ம ஐயாவுகளுக்கெல்லாம் இனி அதிகாரம் அதிகமாகப் போவுதாமே! இனிமேலே கமிஷனரெல்லாம், கைகட்டித்தான் சேவகம் செய்யவேணுமாம்—எதாவது சேர்மன் ஐயாவுக்கு விரோதமாச் செய்தா, கமிஷனர் கண்ணிலே விரலைவிட்டு ஆட்டி விரட்டிடுவாராம் சேர்மன் ஐயா; பேசிக்கொள்ளுறாங்களே.

**பில்லைச் சேவகன்:**—ஆமாம். ஒரு அதிகாரமும் இல்லாமெ, நாங்க எதுக்கு ஜம்பமாக சேர்மன் என்று பெயரை வைத்துக்கொண்டு இருக்கறது. ஆபீஸ் ப்யூன்கூட மதிக்கமாட்டேன்கிறான், என்று சேர்மன்களெல்லாம், மந்திரிகளிடம் முறையிட்டதாலே, இப்ப புதுசா அதிகாரம் தர ஒத்துகிட்டாங்களாம்.

**பில் கலெக்டர்:**— அப்ப, நம்ம சேர்மன் ஐயாவுக்கு யோகம்னு சொல்லு.

**பில்லைச் சேவகன்:**—அதெப்படி சொல்ல முடியும். அடுத்த தடவையும் அவரே சேர்மனா வந்தாத்தானே.

**பில் கலெக்டர்:**— வரமாட்டார் என்கிறயா?

**பில்லைச் சேவகன்:**—ஒரு இழவு அதிகாரமும் இல்லாதபோதே நம்ம ஐயா' சேர்மனா வர்ரதுக்கு, படாத பாடுபட்டு, ஏறாத வாசப்படி எல்லாம் ஏறி இறங்கி, பலபேருக்கு வாய்க்கரிசி போட்டு சேர்மன் ஆனார். ஏகப்பட்ட செலவுன்னு சொல்றாங்க, ஐம்பது என்கிறாங்க முப்பது என்கிறாங்க, இருவதுக்குக் குறைவில்லை. அப்படி இருக்கச்சே, புதுசா அதிகாரம், கமிஷனரையே மிரட்டி வேலை வாங்கற அதிகாரம் கிடைக்குதுன்னா, போட்டி எவ்வளவு கடுமையாகிவிடும், வாரி இறைப்பாங்களேபணம், ஒரு லகாரம்னாலும் செலவழிக்க ஆசாமிக வருவாங்க—நம்ம ஐயா என்ன செய்வாரு!

**பில் கலெக்டர்:**— அப்ப, முனிசிபாலிடி எலக்ஷனே, ரொம்ப ஜோரா இருக்கும்னு சொல்லு.

**பில்லைச் சேவகன்:**—ஆமாம், எல்லாம் பணநாதன் பாக்யம்தான், வேறென்ன!!

ஸ்தலமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் எனக்கு, நாட்டில் எங்கெங்கு அபிவிருத்தி வேலைகள் நடந்துவருகின்றனவோ அந்த இடங்களே புண்யஸ்தலங்களாகத் தோற்றமளிக்கின்றன”

நேரு பண்டிதர், சொகுசான வாழ்க்கை நடத்துவதற்காகச் சாமியார் கோலம் பூண்ட, சோற்றுத் துருத்திகளைப்பற்றி, நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார், என்பதை அறியும்போது, உண்மையிலேயே மகிழ்ச்சி பிறக்கத்தானே செய்யும்—அவர்களுக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டு காலம்கழித்து விடுவோம், என்ற வேதியத் தலைவர் இங்கு நடந்துகொள்ளும் முறையுடன் இதை ஒப்பிடும்போது, நேரு பண்டிதரிடம் மதிப்புக்கூட பிறக்கிறது. ஆனால் அந்தோ! மறுகணமோ, அவர் பிரச்சினையை விட்டுவிட்டு, வெகுவேகமாக வேறு பக்கம் சென்று விடுவதைக் காண நேரிடுகிறது. கோபமும் வருகிறது, வருத்தமாகவும் இருக்கிறது.

நச்சரவம் புரளுகிறது என்று தெரிந்து, தெரிவித்துவிட்டு, என்ன செய்யச் சொல்லவேண்டும்—நச்சரவம் நெளியும் இடம் இது, இதைப் போய் நாதன் அருள் பெறும் தலம் என்கிறார்கள், நல்லவர்களே! நாசத்துக்கு இடமளிக்காதீர்கள், நச்சரவத்தை ஒழித்திடவாரீர், நச்சரவம் குடிபுகும் புற்றுக்களை ஒழிப்போம், புற்றுகள் தோன்றக்கூடிய காட்டினையே அழிப்போம் கிளம்புங்கள், என்று சொல்லத்தானே வேண்டும். தண்டச் சோற்றுத் தடிராமன்கள் இலட்சக் கணக்கிலே உலவுகிறார்கள், இவர்களை நம்பி உழைத்துச் சேர்த்ததைக் கொட்டி அழவேண்டாம், என்று அறிவுரை கூறவேண்டும்; ஏமாளிகளை ஏய்த்துப் பிழைப்போரைச் சாடவேண்டும்; சட்டத்தின் துணையையும் நாடி, இத்தகைய சழக்கர் கூட்டத்தைக் கலைக்கவேண்டும், மக்களுக்குத் தெளிவும் துணிவும் பிறந்திடத் தக்கவகையில் பகுத்தறிவு புகட்டவேண்டும். நேருபண்டிதர் இதைச் செய்கிறாரில்லை!! நச்சரவம் உலவுகிறது, நாவற்பழம் தின்போம் வாரீர்! என்று ஒன்றுக்கொன்று ஒட்டாத முறையில், எதையோகூற விரும்பி, இடையே, பயந்து, வேறு எதையோ பேசிவிட்டுப் போகிறார்!

அரித்துவாரத்தை அவர் புண்ய ஸ்தலமாகக் கருதவில்லை—கூறுகிறார்.

நீங்களும், பேதமைகொள்ளாதீர், புண்யஸ்தலமாவது பாப பூமியாவது என்று மக்களுக்கு அறிவுரை கூறுகிறாரா — இல்லை!! மாறாக, கும்பமேளா கண்டு களிக்கும் பெருங் கூட்டத்தை, இவர் கண்டு களிப்படைகிறார்!!

சாது சன்யாசிகள் என்ற பேரால் சோம்பித்திரிந்து சொகுசாக வாழும் சழக்கரைக் கண்டித்து விட்டு, அடுத்த கணம், ஐந்தாண்டுத் திட்டம், அணுகுண்டுயுகம், ஐசன், அவர்போக்கு, என்று வேறு பிரச்னைகளை எடுத்துக் கொள்கிறார்!!

புண்யஸ்தலம், எனக்கு, அரித்துவாரமல்ல, எங்கெங்கு அபிவிருத்தி வேலைகள் நடக்கிறதோ, அவைதான் எனக்குப் புண்யஸ்தலம் என்கிறார்; ஆனால், இவர் பெற்றுள்ள இந்தப் புத்தறிவை மற்றவரும் பெறவேண்டும் என்று விரும்புவதாகத் தெரியவில்லை!! எனக்குச் சிரகச் சம்பாவில் சாதம், தக்காளி சூப் கோழிக் கரி வறுவல் இவைதான் பிடிக்கும், என்று புளித்த காடியும் புழுத்துப்போன கருவாட்டையும் சுவையான உண்பண்டம் என்று எண்ணிக் கிடப்போனிடம் கூறிப் பயன் என்ன!!

அவர்களின் மனப்போக்கை அல்லவா மாற்றவேண்டும்.

அவர்களைச் சாது சன்யாசிக் கோலத்தில் உலவும் சடங்களைக் கொழுக்கச் செய்யும் ‘சேவை’யில் ஈடுபட விட்டுவிட்டு, எனக்கு இது பிடிக்காது, என் காசி சிந்திரி, என் கங்கை பக்ராநங்கல், என் கயா சித்திரஞ்ஜன், என் புண்யஸ்தலம் அபிவிருத்திவேலை நடக்கும் இடம் என்று பேசிப் பயன் என்ன!!

இங்குதான், நாம் தேவைப்படுகிறோம், தம்பி! பெரிய இடத்திலே உள்ளவர்கள், பாமரமக்களின் சிற்றத்தைக் கிளறிவிடக் கூடிய ஒரு சொல்லும் கூறமாட்டார்கள்! உலகுக்கு உபதேசம் செய்வார்கள்! ஊராரிடம் பகுத்தறிவு பேசமாட்டார்கள். ‘ஓட்டு’ இருக்கிறதே தம்பி! அது ‘வாய்ப்பூட்டு’ போட்டு விடுகிறது!. நாமதான், இந்தப் பிரச்சனைகளை எடுத்துக் கூறும் பணியினைத் தொடர்ந்து செய்கிறோம், துணிந்து செய்கிறோம், தூய்மையான நோக்கத்துடன் செய்கிறோம், தக்க பலன் மலரவும் காண்கிறோம், மகிழ்கிறோம்.

## பொதுச் செயலாளருக்கு எழுதுக!

இந்தி ஆதிக்கத்தைக் கண்டிக்கும் அறிகுறியாக, மாவ்லங்கர் அவர்களுக்குச் சேலம் நகராட்சி மன்ற உறுப்பினராக உள்ள நமது தோழர்கள், கருப்புக்கொடி காட்டினரே, அது போல், வடநாட்டு மந்திரிகள் வடநாட்டு ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதற்காக இங்கு பவனிவருகிறபோது, கருப்புக்கொடிகாட்டி, கண்டனத்தைத் தெரிவிப்பது என்று நமது கழகம் திட்டம் வகுத்திடலாகாதா என்று எழுதிக் கேட்கிறார்கள் நண்பர்கள், இது குறித்து என்கருத்தைக்கேட்பது முறையல்ல, பொதுச் செயலாளருக்கு எழுதுங்கள், நானும் அவரிடம் எடுத்துக் கூறுகிறேன்.

**அண்ணாதுரை.**

பட்டவர்த்தனமாக, மூடத்தனத்தைக் கண்டித்துப் பேசினால், பாமர மக்கள் சீறிப் பாய்வர், அரசியல் பீடத்திலிருந்து உருட்டிவிடக் கிளம்பக்கூடும் — எனவே ஜாடை மாடையாக மட்டுமே கூறமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்; அறிவு முதிர்ச்சியின் காரணத்தால் அல்ல, தம்பி! அச்சத்தால் தான். நமக்கு அவ்விதமாக அச்சம் எழக் காரணம் இல்லை, நாமோ அரசியல் ஆண்டிப் பண்டாரங்கள்!! எனவே, பிறர் அச்சத்தால் வாயடைத்துப்போகும் நிலையிலும், நாம் பேசுகிறோம்; ஏசுகிறார்கள், மேலும் பேசுகிறோம்; கல் வீசுகிறார்கள் தொடர்ந்து பேசுகிறோம்; காலிகளை ஏவுகிறார்கள், எனினும் பேசுகிறோம். நாம் இம்முறையில் துணிந்து செயலாற்றினால்தான், அச்சம் காரணமாக வாயடைத்துக் கிடப்போரும், நமக்கென்ன என்று ஒதுங்கிக்கொள்வோரும், நம்மால் ஆகுமா என்று பெருமூச்செறிவோரும், நாம் தானா இதற்கெல்லாம் என்று சலிப்படைவோரும், மெள்ள மெள்ளத் தமது போக்கை மாற்றிக் கொண்டு, ஜாடை மாடையாக முதலிலும், வெளிப்படையாகவே பிறகும், வீரத்துடன் எதிர்காலத்திலும், பேச முற்படுவர்!

குன்றக்குடி அடிகளாரின் போக்கைக் கவனித்து வருகிறாயல்லவா தம்பி! பார்க்கிறாயல்லவா. அவர் சைவ மாவட்டத்தில் சுயமரி

யாதை மாநாடு நடத்திவரும் வேடிக்கையை.—பயனுள்ள வேடிக்கையை.

அதுபோல எண்ணற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்ட உள.

அரித்துவாரத்தை புண்யஸ்தலம் என்று ஏற்றுக்கொள்ள மறுத்து, எங்கெங்கு அபிவிருத்தி வேலை நடக்கிறதோ அவைகளே, என் புண்யஸ்தலங்கள் என்றுபேசிடும் பண்டிதரின் கருத்துரையை அலசிப்பார் தம்பி! புண்யம் என்றால் என்ன? எதைப் பாமரமக்கள் புண்யம் என்று எண்ணி ஏமாறுகிறார்கள் — அறிவுத் தெளிவுள்ளோர் எதைப் புண்யம் என்று கொள்வர், மக்கள் வாழ வழி செய்வதும், வாழ்வின் வளத்தைப் பெருக்குவதும்தான் 'புண்யம்', அதற்கான வேலைகள் நடைபெறும் இடமே புண்யஸ்தலம், மடங்களிலே உள்ள சடங்களாலல்ல, தொழிற்சாலைகளிலே நரம்பு முறியப் பாடுபடும் பாட்டாளிகளால்தான், நாடு செழிக்கும், புண்ய தீர்த்தத்தால் அல்ல, புதிய புதிய நீர்த்தேக்கங்களால்தான் பாலைவனம் சோலைவனமாகும், ஆறுகால பூஜை, அபிஷேகம், ஆராதனை இவைகளால் அல்ல, அணைக்கட்டு, மின்சார நிலையம் உர உற்பத்தி, இவைகளால்தான், மக்களின் வாழ்வுமேம்பாடு அடையும், என்ற இன்னோரன்ன கருத்துக்களெல்லாம், ஊற்றெடுத்து ஓடிவரும்! ஆனால், அலசிக் காட்டும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தம்பி! ஐந்தாண்டுத் திட்டத்திலே நடைபெற்ற ஓரவஞ்சனையைப்பற்றி, நாம் உள்ள உரத்துடன், ஊராள்வோரின் பகைபற்றிக் கவலைப்படாமல், காங்கிரசில் இருப்போரும், நுழைவோரும் கண்டிப்பதுபற்றி சட்டை செய்யாமல் எடுத்துக்காட்டியதால்தான், இப்போது காங்கிரஸ் வட்டாரமே கூட அதுபற்றிப் பதைத்தும் பதறியும், துக்கம் தொண்டையை அடைக்க, வெட்கம் பிய்த்துப் பிடுங்கும் நிலையில் பேசிடக் கேட்கிறோம், சுதேசமித்திரன் கேலிச் சித்திரம் போட்டிடக்காண்கிறோம், தலைமை நிலையத்திலிருந்து உங்கள் ஊருக்கு வந்திருக்குமே படம்!!

தம்பி! இடையே இதையும் சொல்லி வைக்கிறேன்.

எவ்வளவோ செலவாகிறது, எதெதற்கோ செலவாகிறது, எதையாவது குறைத்து, பணம் சேர்த்து அந்தக் கேலிச் சித்திரத்தைப் பெரிய அளவில், பத்தாயிரம் மக்கள் கொண்ட கூட்டத்திலும், கோடியில் உள்ளவருக்குப் பளிச்சென்று தெரியும் வகையில் துணியில் ஓவியமாக்கி வைத்துக் கொண்டு, நமது கழகக் கூட்டங்கள் நடைபெறும் போது, மேடை அருகில் அதைத் தொங்கவிடு—ஒரு மணி நேரச் சொற்பொழிவை, அந்தப்படம் தந்துவிடும்.

காங்கிரஸ் வட்டாரமே இப்போது, துணிந்து கிளம்புகிறது, தம்பி! வடநாட்டின் போக்கைக்கண்டிக்க! ஆமாம், வீணுக்கா உழைத்தோம், தூவிய விதை என்ன, பதரா? காங்கிரஸ் நண்பர்களின் மனம்தான் என்ன வரண்ட பாலையா!! பலன் தெரிகிறது மெள்ள மெள்ள!!

பல இதழ்கள், சில சோகமாகவும், சில கோபமாகவும், 'மத்ய சர்க்காருக்கு' அநீதியை எடுத்துக் காட்டுகின்றன!

வடநாட்டுச் சர்க்கார் என்று விளக்கமாக நாம் சொல்கிறோம் இந்த ஏடுகள், மத்திய சர்க்கார் என்று வினயமாகச்சொல்கின்றன!

ஆரம்பக் கட்டமல்லவா, கூச்சம், அச்சம், இருக்கிறது.

காதல் கனிரசமா, துவக்கத்திலேயே கிடைத்துவிடுகிறது, கடைக்கண் வீச்சுதானே! தம்பி! அது என்ன சாமான்யமானதா!! எத்தனை இன்பக் கனவுகளைக் கிளறிவிடுகிறது!!

அதுபோலத்தான், இந்த இதழ்கள், அச்சத்துடனும் கூச்சத்துடனும் இப்போது, எழுதுவது!!

யாராவது பார்த்துவிட்டால்!! வெட்கமாக இருக்கிறது! உஹும்! நாளைக்கு! சோலையில்!!—என்று கொஞ்சுமொழி பேசிவிட்டு காதலன் பிடியிலிருந்து தப்பிச்செல்லும் தத்தை, என்று வைத்துக் கொள்ளேன்!

சமயம் கிடைக்கும் போதெல்லாம், இந்த ஏடுகள், இப்போது மத்ய சர்க்காரின் போக்குபற்றி எழுதுகின்றன—கவனித்தாயா!!

அரித்துவாரம் பற்றிப் பேசிய நேரு பண்டிதர், புண்யஸ்தலம் என்பது பற்றி தமது கருத்துரையை அளித்தாரல்லவா, அதையே, சாக்காக வைத்துக்கொண்டு ஒரு காங்கிரஸ் ஏடு மத்ய சர்க்காரின் போக்கை இடித்துரைத்திருக்கிறது — கன்னத்தில் இடித்து, 'காலை பிறந்ததும் என் நினைவே போய்விடுமல்லவா, கண்ணாளா!' —என்று கேட்கும் காரிகைபோல— கதைகளில்!!—இந்த ஏடு எழுதுகிறது—இத்தனைக்கும், விகடம் செய்யும் வேலையை மேற்கொண்டுள்ள ஏடுதான்!!—ஆனந்தவிகடன், அது எழுதுகிறது.

"அரித்துவாரம் இந்துக்களின் புன்ய ஸ்தலமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் எனக்கு நாட்டில் எங்கெங்கு அபிவிருத்தி வேலைகள் நடந்து வருகின்றனவோ அந்த இடங்களே புண்ணியஸ்தலங்களாகத் தோற்றமளிக்கின்றன என்று கூறித் தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் அனைவரும் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

புண்யஸ் தலங்கள் என்னும் போது வட இந்தியாவை விடத் தென்னிந்தியாவிலேயே இவை அதிகமென்று கூறலாம் எனினும் பொருளாதாரத் துறையில் தென்னிந்தியா பின்னணியிலேயே இருந்து வருகிறது. முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்திலேயும் தென்னிந்தியா நேருஜியின் அர்த்தப்படி புண்ய ஸ்தலமாகச் சீர் பெறவில்லை. இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்திலேயும் தென்னிந்தியா பொருளாதாரப் புண்யஸ்தலமாகத் திகழும் பாக்யம் பெறுதோவென ஐயுற வேண்டி இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வட இந்தியாவிலேயே நிர்மாணிக்கப்படுவதைப் பற்றியும், தென்னிந்தியா அலட்சியம் செய்யப்படுவதைக் குறித்தும் வினவினால், நிதி மந்திரி தேஷ்முக் உள்பட இந்திய சர்க்கார் மந்திரிகள் அனைவரும் சரியான பதில் அளிப்பதில்லை.

தம்பி! எப்படி, எந்த இடத்திலிருந்து நமது பிரச்சாரம பலன் அளித்திருக்கிறது பார்!!

காரம் இல்லை என்பாய்—ஆமாம்—எப்படி இருக்க முடியும்—இப்போது!

எழுதுகிற பாணிகூட, அரசியல் எழுச்சி ஊட்டத்தக்கதாக இல்லை—தெரியாததால் அல்ல, ஏ! அப்பா! வெளிநாட்டு விவகாரங்களைப் பற்றி எழுதும்போது பார், புரட்சி படமெடுத்தாடும் இந்த ஏடுகளில்! ஆனால் நேருஜியைப் பற்றி எழுதும் போது, நெளியவேண்டி இருக்கிறது, 'நெஞ்சில் இடம் கொண்டான்' ஆயிற்றே, அதனால்,

அவளுக்குத்தானு கண்ணு! பாரிஜாதம்! எனக்குக் கிடையாதா! என்னிடம் அன்பு இருந்தால் எனக்குப் பாரிஜாதம் தரவேண்டும் என்று, ராதா கேட்கிருள் கண்ணனிடம்—பாரிஜாத புஷ்ப ஹரணம் பார்த்திருப்பாயே நாடகம், பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நடக்கும். அந்தப் பாணியில் எழுதுகிறது விகடன்—என்ருலும், விஷயத்தைச் சொல்லவேண்டிய கட்டம் வந்துவிட்டதல்லவா, இதற்காக நாம் பட்டகஷ்டம் கொஞ்சமா!

எல்லா தொழிற்சாலேயும் வட நாட்டில், தென்னிந்தியா அலட்சியப் படுத்தப்படுகிறது.

விகடனிடமிருந்து இந்தக் கருத்துரை—இடித்துரை,—வருமென்று யார் எதிர்பார்த்திருக்கமுடியும்.

திராவிடம் என்ற சொல்லேயே கூற முடியவில்லே. விகடனுல், தென்னிந்தியா என்று எழுதுகிறது.—பரவாயில்லே, அதனுல் என்ன—அத்தான் என்று அன்பு சொட்ட அழைத்திட ஆரணங்கால் முடிகிறதா, "அப்பா எங்கேடா, கண்ணு!" என்று குழந்தையைப் பார்த்துக் கேட்பதுதான் தெரியுமே நமக்கு—அது போல் இது என்று எண்ணிக்கொள்வோம்.

விகடன் மட்டுமல்ல, வேறு வேறு வேலேயாகக் கூடிடும் போதுகூட, யாரார்ருக்கோ, இதே கருத்துத்தான் வருகிறது! யார் உள்ளத்தையும் இந்தக் கருத்து சும்மா விடுவதில்லே — புகுந்து குடைகிறது!!

தங்களுக்கு இப்போதுள்ள அதிகாரம் போதாது, மேலும் சில பல அதிகாரம் வேண்டும் என்று கேட்க மாநாடு நடத்துகிருர்கள், சென்னே ராஜ்ய நகராட்சி மன்றத் தலேவர்கள்! அங்கு 'ஏகமனதாக' நிறைவேறியிருக்கும் தீர்மானம் இதுதான்—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது எல்லா பெரிய தொழிலேயும் வட நாட்டிலே அமைந்துவிட்டார்கள், இந்த இரண்டாவது திட்டத்திலாவது தென்னுட்டில் அதிகமான பெரிய தொழிலும், திட்டமும் வேண்டும்.

சாலேயிலே சோலேயிலே, ஆற்ரோரத்தில் அக்ரகாரத்தில், பத்திரிகை நிலேயத்தில் கமிட்டி கூட்டங்களில், வியாபார சங்கத்தில், விசேஷ மாநாடுகளில், அமைச்சர்கள் மாளிகையில் அரசாங்க அலுவலகங்களில், எங்கும் பேசப்படும் பிரச்னேயாகிவிட்டது — எங்கும் நிறைநாதமாகிவிட்டது — செங்கொடிக்காரின் இடம் தவிர! அவர்களுக்குப் பாவம், ஒரே அதிர்ச்சி; அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி, எனவே இந்த எழுச்சி புக இடமுமில்லே—நேரமுமில்லே, அந்த ஒரு இடம் தவிர, மற்ற எல்லா இடத்திலும், சிந்தனேயைக் கிளறிவிட்டிருக்கிறது நாம் எடுத்துக் காட்டி வரும் பிரச்னே.

ஐயே! உங்களேத்தான்! காதிலேயே விழலேயா நான் கூப்பிடறது—இந்தாருங்கோ காப்பி!—என்று கதவுக்குப் பின்புறம் மறைந்து நின்றபடி, காரிகை அழைக்கும் காட்சி தெரிகிறதா, கைவளே ஒலி கேட்கிறதா!!

அன்புள்ள,

அண்ணுதுரை.

# அரசியற் கருத்துக்கள்

## [ அன்று முதல் இன்று வரை ]

[பேராசிரியர் இருதயராஜ்]

இங்கிலாந்தில் நகர்மன்றங்களின் சீர்திருத்தச் சட்டம் 1835ல் செய்யப்பட்டதும், அதேகாலத்தில் இந்தியாவில் நிர்வாக இயந்திரத்தை மக்களே மதிக்கும்படியாக மாற்றி அமைத்தற்கும், இங்கிலாந்தில் சிறையிலிருப்பவர்கள் குற்றம் செய்த காரணத்தால் மிருகங்களாக மாறிவிடுவதில்லே, அவர்களேயும் மனிதர்களேப் போலவே நடத்தவேண்டும் என்ற அடிப்படையில் சிறைச் சீர்திருத்தங்களும், உயர்தரப் பல்கலேக் கழகப் படிப்பு ஒரு குறிப்பிட்ட அரசாங்க அங்கிகாரம் பெற்ற மதத்தினருக்கே கிடைத்துக்கொண்டிருந்ததை மாற்றி, மற்ற மதத்தினரும் அக்கல்வி பெற வசதியேற்படுத்தியும், தொழிலாளர் தங்கள் குறைகளே நீக்கிக்கொள்ள அவர்களாகவே முயற்சித்து தொழிற் சங்கங்கள் நிறுவுவதை அரசாங்கம் சட்டவிரோதமாகக் கருதினதைவிட்டு, தொழிற் சங்கங்களே சட்ட பூர்வமாக அங்கிகாரம் செய்ததும், யுட்டிலிட்டேரியன் அல்லது 'பயன்' கொள்கைகள் நடைமுறையில் நன்மை பயக்கக்கூடியனவென்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குச் சான்றுகளாகும். கூடிய வரையில் அதிகமான பேருக்கு முடிந்தளவு அதிக நன்மை செய்வது என்ற இந்தப் 'பயன்' கொள்கை நடைமுறையில் அரசாங்கத்தின் அதிகாரத்தை, தனி மனிதனின் சுதந்தரத்தைப் பறிக்காத விதத்தில் கட்டுப்படுத்தி, பொருளாதாரத் துறையில் சுதந்தரத்தை ஆதரித்ததால் அது வெகு விரைவில் பரவி 19வது நூற்ருண்டில்பல கலாம் நிலேத்துச் செல்வாக்குப் பெற்றிருந்தது இங்கிலாந்தில்.

19-வது நூற்ருண்டில் பயன் கருதி ஆட்சி புரியவேண்டும் என்ற கொள்கை பரவிவந்த நேரத்தில் வேருெரு புதிய கொள்கையும் மக்கள் மனதைக் கவர ஆரம்பித்தது.

பிரஞ்சுப் புரட்சியின் போதே, பிரபுக்கள் மத குருக்கள் இவர்களுடைய சொத்துக்கள், மக்களால் சூறையாடப்பட்டபோதே, சொத்துரிமையின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற கேள்வி, சிலரால் அச்சத்துடனும், சிலரால் ஆவலுடனும், எல்லோராலும் அக்கரையுடனும் கேட்கப்பட்டது.

தொழிற் புரட்சியின் விளேவாக ஆலேத் தொழில் பெருகியது. ஒரு சிலர் முதலாளிகளாகவும், பெரும்பான்மையோர் கூலிகளாகவும், பணம் ஒரு சிலரிடத்தில் குவியவும், பஞ்சைகள், பராரிகளின் தொகை வளரவும், முதலாளிகள், தொழிலாளிகள் இவர்களுக்கிடையே தோன்றிய பிளவும் பள்ளமும் விரிவடையவும் துவங்கியது. கிராமப் புறங்களேவிட்டு நகரங்களுக்கு வேலேதேடிச் சென்ற பல்லாயிரக் கணக்கானவர்கள் சுகாதாரமின்றி நெருக்கடி நிறைந்த நகரங்களிலே உடல் நிலேயும் ஒழுக்கமும் கெட்டு அவதிப்பட்டார்கள்.

தொழிலாளர் தங்கள் நிலே

மையை உயர்த்த அரசாங்கம் முன் வரவில்லையென்று கண்டு, தாங்களாவது அம்முயற்சி எடுக்கலாம் என்ற எண்ணத்தில் தொழிற் சங்கங்கள் அமைவதை அரசாங்கம் தடைசெய்தது, முதலாளிகளின் பக்கம் இருந்துகொண்டு தொழிலாளரின் உரிமைகளைப் பாதிக்கும் வண்ணம் சட்டங்கள் செய்யப்பட்டன. பொருளாதார நிபுணர்கள் முதலீட்டின் அவசியத்தையும் பெருமையையும் எடுத்துக்காட்டி முதலாளிகளின் கை வலுக்கச் செய்தனர் அரசாங்கத்தின் ஆதரவைத் துணைகொண்டு.

இந்த நிலையில்தான் சமதர்மம் என்ற இலட்சியம் தலை தூக்க ஆரம்பித்தது.

**ஓவன்**

இங்கிலாந்தில் ஓவன் என்பவர் முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் போட்டியைத் தவிர்த்து அவர்களிடையே கூட்டுறவை வளர்க்கப் பாடுபட்டார். அவருடைய முயற்சியால் 19-வது நூற்றாண்டில் பல சட்டங்கள் தொழிலாளருக்குச் சாதகமாக இயற்றப்பட்டன.

ஓவன் நினைத்தார்: 'ஒழுக்கமென்பது மனிதனுக்கு முக்கியமானது. அது பிறப்பு, செல்வநிலை, சூழ்நிலை, மொழி, மதம், சுற்றுச் சார்புகளைப் பொறுத்தது. சொத்து வைத்திருப்பதன் மகத்துவம் மிகப் பெரிது: அதனால் யாருக்கும் சொத்தில்லாமலிருக்கக்கூடாது' என்று. உண்மையில் மனிதர் நல்லவர்கள். சொந்தச் சொத்துரிமை, போன்ற சமூக ஏற்பாடுகள்தான் அவர்களை கெடுக்கின்றன என்கிறார்.

கூலியாக வேலைசெய்யும் ஒவ்வொருவனும் தானே முதலாளியாகவேண்டும். அவனவன் தன்னுடைய உழைப்பின் பயனை அடைந்தால் அவன் முதலாளியாகிவிடுவான். சோம்பேரிகளும், பிறரை வேலைவாங்கி லாபம் சம்பாதிக்கும் முதலாளிகளும்—நீக்கப்படவேண்டும். உழைப்பவர்களின் சங்கங்கள் நிறுவப்படவேண்டும் சாமான்களின் விலை—பணம் என்ற சாதனத்தின் மூலம் அல்லை—அந்த சாமான்கள் எவ்வளவு நேர உழைப்புப்பெறுமானமோ அதைப் பொருத்து நிர்ணயிக்கப் படவேண்டும் என்றார்.

500-லிருந்து 3000-பேர் வரை கொண்ட சொந்த சொத்து, குடும்பம் இல்லாத ஒரு சமுதாயத்தை நிறுவுவது. அதன் விவகாரங்களைக் கவனிக்க அவர்களில் 30-லிருந்து 40-வயது வரை உள்ளவர்களெல்லாம் கொண்ட ஒரு குழுவை நியமிப்பது. அச்சமூகத்துக்கும் அதைப் போன்ற மற்ற சமூகங்களுக்குமிடையே ஏற்படும் விவகாரங்களை கவனிக்க 40-லிருந்து 60-வயது வரை உள்ளவர்களின் குழுவை நியமிப்பது. இம்மாதிரி பல சமூகங்களை ஏற்படுத்தினார் ஓவன்—தன் சொந்த முயற்சியினால், இச் சமூகங்களில் நல்லொழுக்கத்தை வளர்க்கும் நோக்கத்துடன் நல்ல சூழ்நிலை நிலவும்படி செய்து எல்லோருக்கும் புத்தகக், கல்வி தொழிற் கல்வி முதலியவைகளை போதிக்க ஏற்பாடு செய்தார். மனிதப் பண்புக்கு மாறாக நடப்பவர்களை சமூகத்திலிருந்து நீக்கி சிகிச்சைபெறும் நிலையங்களுக்கு அனுப்பவேண்டும் என்று திட்டமிட்டார்.

அவர் ஏற்படுத்திய இந்தச் சமூகங்கள் அதிக நாள் நிலைக்கவில்லையானாலும், அவருடைய சேவையை மறக்க முடியாது. கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்கும், தொழிற்சங்கநடவடிக்கைகள் பலம் பெற்றுப் பரவுவதற்கும் அவர் மிகவும் துணையாயிருந்தார்.

**காரல் மார்க்ஸ்**

ஓவனைப்போலவே செயின்ட் சைமன், பூரியர், புரூதான் போன்ற மற்றும் பலரும் கற்பனைச் சமதர்ம சமூகங்களை நிறுவினார்கள் என்றாலும், இன்னும் சமதர்மக் கொள்கையானது ஒரு அரசியல் தத்துவமாகத் தொகுத்து வெளியிடப்படவில்லை. அந்தப் பணியை மேற்கொண்டவர் கார்ல் மார்க்ஸ் என்ற ஜெர்மனியில் தோன்றிய யூதர். அவர் முப்பது வயதுக்குப்பின் இங்கிலாந்துக்குச் சென்று இலண்டனிலேயே சாகும்வரை பெரும்பாலும் வாழ்ந்துவந்தார். அங்கு தொழிலாளர் நிலைமையைக் கண்டும், பிரான்சின் அரசியல் அநுபவங்களை ஆராய்ந்தும், அவர் தன் கொள்கைகளை உருவாக்கினார் என்று சொல்லலாம்.

ஒழுக்கம், மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல், இவைகளைப் பற்றிய கருத்துக்களும், மற்றும் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளும் இயற்கையாகவே மாறி, மாறி, வளர்ச்சியடையும் தன்மை உடையவை என்ற தத்துவத்தோடு தன் ஆராய்ச்சியை ஆரம்பித்தார் மார்க்ஸ்.

இந்த தத்துவம் ஹெகலின் கொள்கையை ஆதாரமாகக் கொண்டது. ஹெகல் கூறினார், 'மனித வர்க்கத்தின் சரித்திர

## எமகாதகர்

வணக்கம்:—அண்ணாச்சி! இப்ப, பாத்திங்களா, நம்ம பிரசங்கம், பத்தி பத்தியா வருது.........

நமஸ்த்தே:—ஆமாம், ஒவ்வொரு நாளும் வருது......

வணக்கம்:— பயலுகளுக்கு இப்பத்தான் நம்ம அருமை, பெருமை தெரியுது; என்ன!

நமஸ்த்தே:—ஆமாமாம்! மூக்காலே அழுதபடி இருப்பானுக, முக்காடிட்டுத் திரிவானுக, இந்தக் கழகத்தானுக.........

வணக்கம்:— அவங்களைச் சொல்லலே அண்ணாச்சி! இந்தக் காங்கிரஸ் காரனுங்களைத்தான் சொல்றேன், முன்னே எல்லாம் நான் மூணுமணி நேரம் மகாநாட்டிலே பேசினா, இந்தப் பயலுக மூணுவரி கூடப் போடமாட்டானுங்க, இப்ப என்னடான்னா, மோப்பம் பிடிச்சுகிட்டு என் பின்னோடு வாரானுங்க, போட்டோபடம் போடுறானுங்க, அடே அப்பா! எமகாதகப் பேர்வழிங்க அண்ணாச்சி, இவனுங்க......

நமஸ்த்தே:—அதையாச் சொல்றே. நான் இந்தக் கழகத்தானுங்களைத் தான் பேசறேன்னு எண்ணிக்கிட்டேன். வரட்டுமா!

வணக்கம்:— போய்வா அண்ணாச்சி! வணக்கம்!

நமஸ்த்தே:—சரி, சரி.........நமஸ்த்தே!

வளர்ச்சி என்பது வெறும் கருத்துக்களின் போராட்ட வரலாறு' என்று.

மக்கள் எப்பொழுதுமே ஒரே கருத்தைக் கொண்டிருப்பதில்லை. புதியக் கருத்துக்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. பழைய கருத்துக்களுக்கும் புதியவைகளுக்கும் எப்பொழுதும் போராட்டம் இருந்துகொண்டே இருக்கும், ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு கருத்து வெற்றியடையும்.

மனித அறிவு எப்பொழுதும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. கருத்துக்களும் இப்படித்தான். முதலில் ஒரு கருத்து வெற்றி பெற்று அதன் விளைவாக ஒரு ஸ்தாபனம் அமைக்கப்படுகிறது. நடைமுறையில் அந்த அமைப்பில் குறைகள் தோன்றுகின்றன. குறைகளைக் கண்டவுடன் அதன் மேல் வெறுப்புற்று அதற்கு நேர் மாறான வேறொரு ஸ்தாபனத்தை நிறுவுகிறோம். இதிலும் குறைகள் நாளடைவில் காணப்பட்டதும் மூன்றாவது நிலையை அடைகிறோம். அதாவது இரண்டு வகை ஸ்தாபனங்களினுடைய குறைகளையும் நீக்கிவிட்டு, அவைகளில் காணப்பட்ட நற்பண்புகளைக் கொண்ட ஒரு புதிய ஸ்தாபனம் தோற்றுவிக்கப்படுகிறது. இப்படித்தான் சரித்திரம், வரலாறு இருக்கும் என்றார் ஹெகல்.

விவாத முறையில் இந்த ஒழுங்கைத்தான் பின்பற்றுகிறோம். முதலில் நாம் உண்மையென்று நினைப்பதை உண்மையென்று நம்பச் செய்கிறோம். பின் அது உண்மையல்லவென்று வாதாடுகிறோம். அதன் பின் இரண்டுங் கலந்த கருத்துத்தான் உண்மை என்ற முடிவுக்கு வருகிறோம்,

எடுத்துக்காட்டாக, மனிதருக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமில்லை என்று நினைப்பதை உண்மைஎன்று நிலைநாட்டுகிறோம். பின்னர், மனிதர் வேறு, மிருகம் வேறு, இருவருடைய இயல்புகளும் வேறானவை என்று முந்திய வாதத்தை மறுக்கிறோம். முடிவில் இரண்டு வாதங்களையும் ஆராய்ந்த பிறகு உண்மையான முடிவுக்கு வருகிறோம்—இரண்டு வாதங்களிலும் மறைந்திருக்கும் உண்மைகளை ஒன்று சேர்த்து—மனிதன் மிருகம்தான்; ஆனால் முற்றிலும் மிருகத்தைப் போலல்ல; அவன் ஆறறிவுள்ள மிருகம்—— என்ற முடிவுக்கு வருகிறோம்.

இந்த முறையைப் பின்பற்றி மார்க்ஸ் சொன்னார்; மனித வரலாறும், சமுதாய அமைப்புகளும், மாறிக்கொண்டே இருக்கும் தன்மையுடையன இந்த மாற்றத்துக் காரணம்—ஹெகல் சொல்லுவது போல கருத்துப் போராட்டம் அல்ல—பொருளாதாரத் துறையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களும், அதன் விளைவாகக் காணப்படும் போராட்டங்களும்தான் என்றார் மார்க்ஸ். பொருளாதார சக்திகளே மக்களின் வாழ்க்கை முறையை நிர்ணயிக்கின்றது. இந்தச் சக்திகளின் போராட்ட வரலாறுதான் மனிதரின் வரலாறு.

இந்தப் பொருளாதாரப் போராட்டத்தில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வகுப்பினர் வெற்றியடைவார்கள். உலக வரலாற்றின் ஏடுகளைப் புரட்டினால், தனிசொத்துரிமை ஏற்பட்டதிலிருந்து எந்தக் காலத்திலும் இரண்டு பொருளாதார சக்திகள் இரண்டு மனித வர்க்கங்கள் எதிர்த்துப் போரிட்டுக் கொண்டு வந்திருக்கின்றன வென்பதைப் பாக்கலாம. சீமான்கள் ஒரு புறம், சிந்துவாரற்ற ஏழைகள மறுபுறம், முதலாளிகள், தொழிலாளிகள், ஆண்டான், அடிமை, நிலச்சொந்தக்காரர்கள், நிலத்திலே உழைக்க மட்டும் கொடுத்து வைத்தவர்கள், பணக்காரர்கள், பஞ்சைகள்,—இப்படி ஒவ்வொரு காலத்திலும் பொருளாதாரத்தில் பலமுள்ளவர்கள் ஒரு புறம், பொருளில்லாத பாட்டாளிகள் மறுபுறமும் போராடுவதன் சரித்திர வரலாறுதான் உலக சரித்திர வரலாறாக இருக்கிறது என்றார் மார்க்ஸ். (தொடரும்)

## 'கொடுத்து வைத்த' குடும்பம்

அவ எங்கடி, அம்சா?

அம்சாவா! சமூக சேவையிலன்னா இருக்கா, மகாபலிபுரம் போயிருக்கா.

உங்க அண்ணன் எங்கே தொலைஞ்சான்?

அவனா, கம்யூனிஸ்டு மகாநாடு திண்டுக்கல்லில்; போய் மூணு நாளாறது......

நீ மட்டும்தான் கல்லுப்பிள்ளையாராக இருக்கேன்னு சொல்லு...

இல்லை மாமா! நான், காலம் பறத்தான் காட்பாடியிலேயிருந்து வந்தேன்.

அங்கே, என்ன வேலை?

தெரியாதா நோக்கு, நான் 'சிரமதான்' இயக்கத்திலேன்னா இருக்கேன் — அந்த வேலையாப் போயிருந்தேன்.

அப்பா?

அவர் மூணு மாசமா, போடியிலன்னா இருக்கார் — அடுத்த வெள்ளிக்குத்தான் பட்டாபிஷேகம், பிறகுதான் வருவார்—

பட்டாபிஷேகமா...?

ஆமாம். ராமாயண காலட்சேபம நடக்கிறதேன்னோ?

சுப்புப் பாட்டி எங்கே, வளவளன்னு பேசிண்டிருக்குமே...?

சுப்புப் பாட்டிக்கு இப்ப ஏகப்பட்ட கிராக்கின்னா வந்திருக்கு, அமெரிக்க மாதர் சங்கத்திலே இருந்து வந்திருக்காளே, அவாளுக்கு, அப்பளம் போடறது எப்படின்னு பாடம் சொல்லித் தருகிறா, பாட்டி,

பலே! பலே! நான் வந்தவேளை அப்படி. நேக்கு அவசரமான வேலை,...வரட்டுமா...

காப்பி சாப்பிடுங்கோ, மாமா!

போடிபோ! எல்லோரும் டீ சாப்பிடுங்கோன்னு பிரசாரம். செய்யற இலாகாவுக்கு நான் ஜெனரல் மானேஜராக நியமிக்கப் பட்டிருக்கேன் தெரியுமோ.

நல்ல சான்சுதான்! அது இருக்கு, அதுக்கும் நீர் காப்பி சாப்பிடறதுக்கும் என்ன சம்பந்தம்.

சரி! உன் கைப்பட்டாலே காபி, தேவாம்ரதமாயிடுமேண்ணோ, கொடு......

தத்துப்பித்துன்னு உளறுதீர் மாமா.......உட்காரும், இதோ ஐஞ்சு நிமிஷத்திலே காப்பி...போது போகணும்னா, அதோ ரேடியோவைத் திருப்பிண்டு இரும், இதோ வந்துட்டேன்.

## 'சர்டிபிகேட்' வேண்டும்!

என்ன இருந்தாலும் இந்த சர்க்காருக்கு, இவ்வளவு நாஸ்திகப் புத்தி கூடாது! செட்டி நாட்டுச் சீமானென்ன சிங்கார புரிச் செல்வர்களென்ன, கொட்டிக் கொடுக்கிறார்கள் தில்லையம்பலத்தில் ஆனந்த நடமிடும் ஐயனின் கும்பாபிஷேகத்துக்காக. ஏகதடபுடல்கள்! ஏடுகள் எல்லாவற்றிலும், தினசரிவிளம்பரங்கள்!! — அமர்க்களப் படப் போகிறது, சிதம்பரம். ஆயிரக் கணக்கான மக்கள் கூடுவார்களென தீட்சிதர்புரி எதிர்பார்க்கிறதாம். ஈசன் நடராசனென்ன, இலேசுப்பட்டவரா! இகலோகம் துறந்து செல்லும் ஆத்மாக்களுக்கு பரலோகப் பாதைகாட்டி, துஷ்டர்களை சிட்சித்து சிஷ்டபரிபாலனம் செய்யும் சிற்சபை அல்லவா!! பொன்னம்பலத்தவா! என்னப்பனல்லவா!—என்று, எத்தனை பேர், அவருடைய கீர்த்திபற்றி பாடியிருக்கிறார்கள். மக்களும், நடராசனின் 'சக்தியே சக்தி' எனும் நம்பிக்கையால்தானே 'க்ஷேத்ராடனம்' செய்துகொண்டிருக்கிறார்கள்! தில்லை மாகாளியையே' தோற்கடித்தாராமே, நாட்டியப் போட்டியில். அப்பேற்பட்டவரின் கும்பாபிஷேகத்துக்குச் செல்லும் பக்தர்களைப்பார்த்து, சர்க்கார் சுகாதார இலாகா டைரக்டர், அறிக்கை விடுக்கிறார்—வெளியூரிலிருந்து சிதம்பரம் செல்வோர் ஒவ்வொருவரும் காலரா ஊசிபோட்டுக்கொள்ள வேண்டுமாம்; அப்படி ஊசி போட்டுக்கொண்டதற்கான அத்தாட்சிப் பத்திரத்தையும் கைவசம் வைத்திருக்க வேண்டுமாம்; அதிகாரிகள்கேட்டால் காண்பிக்கவேண்டுமாம் — என்ன தைரியம் இந்த சர்க்காருக்கு! காலராத் தெய்வமென்பர், காளியை — அக் காளியையே தோற்கடித்த கனக சபையைக் காணச்செல்ல, 'சர்டிபிகேட்' வைத்திருக்கவேண்டுமாமே!! சிதம்பரம் தீட்சதர்கள், நிச்சயம் இதை எதிர்த்துப் போராடி, கடவுள் சக்தியை நிலைநாட்டுவார்களென எதிர்பார்க்கிறோம்.




## ஒரு நாள் ராஜா

மாணவர்கள், கிராமங்களுக்கெல்லாம் சென்று குடிசைகளுக்கு வெள்ளை அடித்தும், ரோடுகள் போடவுமான வேலைகளைச் செய்வதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகிறது அல்லவா? இதைப் பற்றி, ஆனந்தவிகடன்' எழுதுகிறது — மாணவிகள், குடிசைகளுக்கு வெள்ளையடித்தார்களாம். ரொம்ப சரி! ஆனால், அதே மாணவிகளின் வீடுகளுக்கு யார் வெள்ளை அடிக்கின்றனர். இவர்களா! அல்ல அல்ல—எனும் பொருள்பட. ஒரு ஊரில், மாணவர்கள், பாதை அமைப்பதற்கு ஆன செலவைக் கொண்டு, இரண்டு பாதைகள் போட்டிருக்கலாமென்று புள்ளிவிபரம் தெரிந்த ஒருவர் சொன்னார். மாணவர்களுக்கு ஊக்கம் உண்டாகக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. ஆனால், நீடிக்குமா, இந்தத் தேசிய சேவைகள் அல்லது 'ஒரு நாள் ராஜா!' கதையாகிவிடுமா— என்றே கேட்க நினைக்கிறோம். நல்ல பொழுதுபோக்கு, கலெக்டர்களுக்கு!!

## இரு முகம்

டி. டி. கிருஷ்ணமாச்சாரி வசம் 'இரும்பு உற்பத்தி இலாகா'வை ஒப்படைத்தது கண்டு 'இந்துவும்' பிறரும் மகிழ்வதில் அர்த்தமிருக்கிறது! ஏனென்றால், நேருவையே மிரட்டி, விலகுவதாகரயிலேறி வந்து, கடைசியில்காரியத்தைச் சாதித்துக் கொண்டிருக்கிறார், கிருஷ்ணமாச்சாரி!! ஆனால், அமெரிக்கா,'ஆனந்தப்படுகிறதாம் — அறிவிக்கிறார், இந்து நிருபர். அந்த இலாகா வேறுயாரிடமாவது இருப்பதைவிட கிருஷ்ணரிடம் வந்துவிட்டதென்றதும், குதூகலம் ஏன் உண்டாகவேண்டும், அமெரிக்காவுக்கு? விளக்கமும் தரப்படுகிறது —கிருஷ்ணமாச்சாரியின் மீது இருக்குமளவுக்கு நம்பிக்கை பண்டிதர் சர்க்கார்மீது இல்லையாம், அமெரிக்காவுக்கு. இதனால், எங்கே ஆபத்து வருமோ என்கிற அச்சத்தால் கடன் கேட்கப்போன டாடாவுக்கு, சரியான பதில் சொல்லவில்லையாம், டாலர் தெய்வங்கள். இப்போது! இனிமேல்!! —என்று, ஆனந்தமுடன் அறிவிக்கிறார், நிருபர். கிருஷ்ணர், அந்த இலாகாவை ஏற்றுக்கொண்டதால் சர்க்கார் தலையிடாது எனும் நம்பிக்கை வந்துவிட்டதாம். டாடாவுக்குப் பணம் கிடைப்பதும் நிச்சயமாம்!!—அவர்வசம் இரும்புஉற்பத்தி இலாகா ஒப்படைக்கப்பட்டிருப்பது இவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த அழகில், அவரும் நேரு சர்க்காரில் ஒரு உறுப்பினர்! உறுப்பினர்மீது ஏற்படும் அபிமானம் தலைவர்மீது இல்லை! ஏனென்றால், நேரு, ரஷ்யாவின் உதவியையும் பெற்று ஒரு இரும்பாலை ஏற்படுத்தப்போகிறாரே, அதனால்.

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.